தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௧	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௯ சருவசித்து—மாசி 1948—பிப்ரவரி	மலர் ௰௧

பொழிற் றொண்டர் கருத்துரைகள்.

மகிழ்ச்சி

செந்தமிழ்ச் செல்வரும் நம் சங்க அன்பரும் ஆகும் வீரத் திரு மகனார் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கட்கு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் பேரறிஞர் என்னும் தகுதி யளித்தார்கள். தகுதியளித்தார் பெற்றார் ஆம் இரு தரத்தார் தகுதிகளை யாம் நெஞ்சாரப் புகழ்ந்து பாராட்டி மகிழ்கின்றோம்.

* * * * *

பெருந் தமிழ் மகனாராகிய மாட்சிமிக்க திரு சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் இந்திய மநாட்டுப்பேராட்சி யாளராக வசிக்கப் பெற்றுள்ளமை யறிந்து பெரு மகிழ்ச்சியும் புகழ்ச்சியும் கொள்கின்றோம்.

* * * * *

அறிவின் திறனையும் ஆட்சித்திறனையும் நிலைநாட்டியுள்ள இவ் விரு பெருந் தமிழ் மக்களும், மேலும் மேலும் தம்புகழ் நிறீஇ நீடுவாழ்ந்து, தமிழர் சிறப்பினை நிலைநிறுத்துவார்களாக.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

கரந்தைப் புலவர் கல்லூரி

இக் கல்லூரி தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் அவர்கள் தண்ணிய உள்ளத்திற் றோன்றி, அவர்களின் தளரா முயற்சியால் வேரூன்றி, முத்தமிழ் வள்ளல், இராவு பகதூர் ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்களின் புரப்பினாலும், பிற செல்வர்களின புரப்பினாலும், கடந்த பத்தாண்டுகளாகப் பணியாற்றி வருகின்றது. கல்விக் கின்றியமையாத அமைதியும் இயற்கை நலனும், தட்பமும் சூழ்ந்த இடத்தில் நிற்கின்றது. இக் கல்லூரி சீரிய ஆசிரியர்கள், மாணவர் முற்போக்கொன்றினையே குறிக்கோளாகக் கொண்டுழைக்கின்றனர். தனிப் பட்டமுறையில் ஒவ்வொரு மாணவரும் நம் கல்லூரியில் தாயன்புடன் பேணப் பெறுகின்றனர். தமிழ்க் கல்விக் கேற்ற இடம் இக் கல்லூரியே யாகும்.

இக்கல்லூரியிற் சேர விரும்பும் மாணவர்கள், முக்காலணா அஞ்சற்றலையைக் கரந்தைப் புலவர் கல்லூரி எழுத்தாளருக்கு அனுப்பி, விண்ணப்ப மடல் பெற்று, விண்ணப்பங்களை, நன்னடக்கைச் சான்றுடன், நேரிலோ அல்லது அஞ்சல்வழியோ, 'எழுத்தாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்' என்னும் முகவரிக்கு 8—6—48க்குள் அனுப்பவேண்டும். விண்ணப்பங்களை ஒப்பவோ தள்ளவோ சங்கத்திற்கு முழு உரிமையுண்டு.

மாணவர்க்கு இலவச உண்டி அளித்தற்குச் சங்கப் பொருள்நிலை இதுபோது இடந்தரவில்லை. வாய்ப்பு நேரும் பொழுது, கல்வித் தகுதியும் வறுமைச் சான்றும் உடைய மாணவர்க்கு இலவச உணவு அளிக்கப்பெறும்.

இக்கல்லூரியில் உயர்நிலை மூன்று வகுப்புகளும் (Advance classes), வித்துவான் வகுப்புகளும் (Entrance, Preliminary and Final Vidwan classes) நடைபெறுகின்றன.

கருந்திட்டைக்குடி,
9—5—'48.

ஐ. குமரசாமி பிள்ளை,
எழுத்தாளர்.

திருவாரூர் மெய்ப்பொருள் கல்விக் கழக மாணவர் இல்லத்தின்

மூன்றாவது ஆண்டுவிழா

9—5—48.

தலைமையுரை

முத்தமிழ் வள்ளல் இராவ் பகதூர்

திருவாளர் A. Y. அருளானந்தசாமி நாடார்

கைப் பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி நம் ஔவைப் பிராட்டி செல்வத்தை மதிக்க வில்லை. உண்மை யான செல்வம் கல்விதான் என்பது அவர்கள் கண்ட உண்மை. அதைத்தான் ஆறு சொற்களிலே அழுத்தமாகக் கூறினார்கள்.

கல்வி யாகிய செல்வம், பொருட் செல்வத்தைப் போல, வெள்ளத்தினால் அழிக்கப்படுவ தில்லை; வெந்தணலில் வேகுவ தில்லை; வேந்தராலும் கொள்ள முடிவ தில்லை; கொடுத்தாலும், மேலும் மேலும் பெருகுவ தன்றிக், குறைவ தில்லை; அதனைக் கள்வர்கள் களவாட முடிவ தில்லை; அதற்குக் காவலே தேவை யில்லை. எனவே, கல்வி அழியாச் செல்வம். இக் காரணம் பற்றியே, உலக நடப் பைக் கூர்ந்து நோக்கி உண்மையைக் காணும் அறிவாளி களில் ஒருவ ராகிய நமது ஔவையார் கல்விதான் உண்மை யான பொருள், மெய்ப்பொருள் என்றார்கள்.

மனிதனுடைய வாழ்க்கை அறிவினாலே சித்திரிக்கப்படு கின்றது. பண்பட்ட அறிவாளிகள் சித்திரிக்கும் வாழ்க்கை முறை இன்பம் தருவதாக அமைகின்றது. பண்படாத அறிவினாலே ஆக்கப்படும் வாழ்க்கை முறை இன்னல் விளை விக்கின்றது. மக்களுடைய வாழ்க்கை இன்ப முள்ளதாக இருக்க வேண்டு மானால், வாழ்க்கை முறை செம்மை யான தாக அமையவேண்டும். மெய்ம்மை யான அறிவினாலேயும், தூய்மை யான அறிவினாலேயுமே செம்மையான வாழ்க்கை

முறையை அமைக்க முடியும். எனவே, அறிவுக்குத் தமிழர்கள் சிறந்த மதிப்புத் தந்தார்கள். அதற்கு மிக உயர்ந்த இடம் தந்தார்கள். அதுதான் 'கடவுள்' என்று கருதினார்கள். 'அறிவான தெய்வமே' என்று வழிபட்டார்கள். கற்றதனா லாய பயன் என் கொல்? வாலறிவன், நற்றாள் தொழாஅர் எனின் என்று திருவள்ளுவர் கூறியதிலிருந்து, மெய்ம்மை யானதும், தூய தானதுமான அறிவுடைமையே கடவுள் தன்மை; அத் தகைய அறிவு படைத்தவர்கள் வணக்கத்துக் குரியவர்கள்; என்பது புல னாகின்றது.

பிறக்கும் போதே மனிதன் அறிவாளியாகப் பிறப்பதில்லை. தாய் காட்டச் சிலவற்றை அறிகிறான். தந்தை சொல்லச் சிலவற்றைத் தெரிந்து கொள்ளுகிறான். ஆசிரியர் அறிவுரையால் சிலவற்றை அறிகிறான். மக்கள் கூட்டுறவினாலே சிலவற்றை உணர்கிறான். இயற்கையைக் கண்டு ஆய்ந்து சிலவற்றைத் தெரிந்துகொள்ளுகிறான். இவ்வாறு படிப் படியாக மனிதனின் அறியாமை அகற்றப்பட்டு, அறிவு வளர்ச்சி யடைகிறது. அறவோருடைய கூட்டுறவினாலே அறிவு பண்படுத்தப் படுகிறது; தூய்மை யடைகிறது. இப்படி அறிவின் வளர்ச்சிக்கும், பண்பாட்டுக்கும், தூய்மைக்கும் கருவியாக உள்ளது ஒவ்வொன்றும் கல்வியின்பாற் படும். வாழ்க்கையை இன்ப மானதாக ஆக்குவது தூய அறிவு. தூய அறிவைத் தருவது கல்வி. இதனை உண்மை யான பொருள், 'மெய்ப்பொருள்' என்று கூறுவது மிகப் பொருத்த மான தன்றோ?

மெய்ப் பொரு ளாகிய கல்வியை நாடுவது இக் கழகம் என்பதை இக் கழகத்தின் பெயர் குறிக்கிற தென்று கருதுகிறேன். மெய்ப் பொருளைப் பெறுவதிலே நாட்டம் மிகக் கொண்ட பெரியார் ஒருவர் வரலாறு இங்கு குறிப்பிடத் தக்கது. இப்பொழுது தென் ஆர்க்காடு சில்லா எனப்படும் சேதி நாட்டைத், திருக்கோவலூரைத் தலை நகராகக் கொண்டு, ஆண்டுவந்த சிற்றரசருள் ஒருவர் மெய்ப்பொருள் நாயனார் என்பவர். அவர் பெயருக்குப் பொருத்தமாக அவரது பண்பும் அமைந்திருந்தது. மெய்ப் பொருளைப் பெற அவருக் கிருந்த அவாவின் பயனாக, அவரது ஆட்சியிலே கற்று உணர்ந்து அமைந்த அறவோர்க்கு மதிப் பிருந்தது. அவரது அரண்மனை அறவோர் இல்லமாகவே இருந்தது.

அவர்கள் அரண்மனை எங்கணும் செல்லுதற்கு உரிமை இருந்தது. அரசர் அவர்கள்பால் பல நூல்களைப் பயின்று வந்தார்.

பகையரசன் ஒருவன். அவன் பெயர் முத்தநாதன். போரில் பன்முறை மெய்ப் பொருளாரிடம் தோல்வியுற்ற வன். வஞ்சகத்தால் அவரைக் கொல்ல எண்ணினான். சிவ னடியார்போல் வேடந் தரித்தான். கையில் சுவடி யொன் றோடு அரண்மனைக்குட் சென்றான். அரசர் தனி வாழ்வுக் குரிய பகுதியிலே அரசரைக் கண்டான். புதிய தொரு ஆகம நூலை அரசர்க்கு ஓதுவிக்க வந்ததாகக் கூறினான். அரசர், பாடங் கேட்க, அறவோர் வேடந் தாங்கிய முத்தநாதன் காலடியில் அமர்ந்து வணங்கியபோது, சுவடியில் மறைத்து வைத்திருந்த கத்தி யொன்றால் அரசரைக் குத்தினான். குத்துண்டு சாய்ந்த மெய்ப் பொருளார் தடுத்திராவிட்டால், வாயில் காவல னாகிய தத்தன் வாள் முத்தநாதனை இரு கூறாக்கி யிருக்கும். அது மட்டு மல்ல; அரசரது ஆணையால் தத்தனது துணை கொண்டு, முத்தநாதன் ஒரு இடையூறு மில்லாது ஊரைக் கடந்து வெளியேறினான். முத்தநாதன் இடையூ றின்றி வெளியேறிய செய்தி கேட்கு மளவும் மெய்ப்பொருளார் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. என்னே! அவர் மெய்ப் பொருளிடத்தே கொண்டிருந்த அவா! என்னே! அவர் அறவோரிடம் வைத்திருந்த மதிப்பு!! என்னே! அவரது அன்பும், அருளும்!!! இவை கல்வியால் பெற்ற பண்புக ளல்லவா? இத் தகைய பெரி யாரது பெயரை இக் கழகம் தாங்குகிற தென்றும் கூறலாம்.

இக் கழகம் அமைத் துள்ள மாணவர் இல்லம், நம் இளைஞர்கள் இம் மெய்ப் பொருளைப் பெறுவதற்குப் பெரி தும் துணை புரிந்து வரு மென்பதில் ஐயப்பா டில்லை. இம் மாணவ ரில்ல மானது மேன்மேலும் வளர்ந்து, இன்னும் பெருந் தொகையின ரான நம் சிறுர்க்குப் பேருதவி புரிந்து வரவேண்டு மென்பது என் ஆசை. எனது வாழ்த்து உரித் தாகுக.

மாணவர்களுக்கு ஒரு சில சொல்ல எண்ணுகிறேன். மாணவர்களே! வருங் காலம் உங்க ளுடையது. வருங் கால மக்கள் உங்களால் வாழ்வு சித்திரிக்கப்பட வேண்டிய

தாகும். நீங்கள் கருதலாம், 'நாம் புதிதாக என்ன சித்திரிக்கப் போகிறோம்' என்று. விஞ்ஞானத்தின் வளர்ச்சி மிக விரைவாகச் சென்றுகொண்டிருக்கிறது. 'மாதம் போம் காத வழி' என்ற காலம் மறைந்து விட்டது. 'இம் மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும், அம் மென்றால் ஆயிரம் மைல் போகாதா?' என்று கேட்கும் காலம் வந்துவிட்டது. பழமையை விடாப் பிடியாக பிடித்துக்கொண்டிருந்தீர்களானால் உலகப் போட்டியிலே நீங்கள் தோற்றுப் போவீர்கள். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே'. புதிய நிலைமைக் கேற்ப மக்கள் வாழ்க்கை புதிதாகச் சித்திரிக்கப்படத்தான் வேண்டும். நம் தாத்தா காலத்தில் இருந்தபடி இன்றைய வாழ்க்கையிருக்கிறதா? அல்லது தந்தை காலத்திருந்தது பிள்ளை காலத்தில் இருக்கிறதா? மாறுதல் வேண்டாம் என்று நம் முன்னோர்கள் கருதியிருந்தால், நாம் இன்று இலை தழைகளைக் கட்டிக்கொண்டு, பச்சை இறைச்சி தின்னும் காட்டுமிராண்டிகளாக வல்லவா இருக்க வேண்டும். முன்பெல்லாம் மாறுதல்கள் மிக மெதுவாக ஏற்பட்டு வந்தன. இப்பொழுது மிக வேகமாக ஏற்பட்டு வருகின்றன. மாணவர்களே! காலத்திற் கேற்ப உங்களைப் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்.

நான் முன்னர்க் கூறியபடி, கல்வி, பள்ளிக்கூடங்களில் படிப்பது மட்டுமல்ல. பரந்த உலகத்திலே, அனுபவவாயிலாகப் படிக்கவேண்டிய படிப்பு அளவிலடங்காது. உங்கள் பள்ளிக்கூடப் படிப்பு உலகப் படிப்பிற்குப் பெருந்துணை புரியும். ஆகையால், பள்ளிப் படிப்பை நீங்கள் புறக்கணிக்கலாகாதென்று, உங்கட்கு வலியுறுத்துகிறேன்.

இன்னும் ஒன்று, கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக' என்று வள்ளுவர் கூறியபடி, வெறும் படிப்பு மட்டும் பயனற்றது. நல்ல நூல்களைப் படிக்க வேண்டும். படிக்கப் படிக்க ஒழுக்கமும் படிய வேண்டும் என்று எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

உங்கள் விழாவில் கலந்துகொள்வதிலே எனக்கு மிக மகிழ்ச்சி. என்னை அழைத்த உங்கட்கு என் நன்றி.

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தலைமைத் தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, திருவாரூர்.

கல்வியும், மனமும்

கற்ற கல்வியி னளவிற்குத் தக்க வாறு தான் மனம் விசால மடைந்திருக்கும். இதனை அதிவீரராமபாண்டியர், நைடதத்தின்கண், 'கல்வியி னகன்றிடு கருணைவேந் துளத்து' என்று கூறுகின்றார்.

கல்வி என்னுங்கருவியினால், ஐய(மாகிய கசடு) மணலைத் தோண்ட, உயர்ந்த உண்மைக் கருத்துக்கள் என்னும் நல்ல நீர் ஊறும். மணல் தோண்டி யெடுக்காத கிணறு எவ்வாறு நன் னீரினால் உதவி செய்யாதோ, அதேபோல் கல்வியினால் விசால மடையா மனம் பயன்படுவ தில்லை.

மனத் தாமரை யாகிய மொக்குள் கல்வி என்னும் வண்டினால் தான் மலரவேண்டும்.

'மன முகிழ்த்த, சுரு ணீக்கி மலர்விக்குங் கலை'

எனப், பெரிய புராணத்தின்கண், திருநாவுக்கரசு சுவாமிகள் கல்வி பயிலத் தொடங்கினார் என்ற பொருளைத் தெரிவிக்க வந்த சேக்கிழார் பெருமான் கலைப் பெருமையை நன்கு விளக்கி யிருக்கின்றார்.

ஒருவர் பாடிய பாடல்களைத் திருப்பிச் சொல்லும் இயந்திரம் போலச், சில பாடல்களையோ, வசனப் பகுதிகளையோ கற்றுக் கொள்வது கல்வி யாகாது.

மனக் கோட்டம் நீங்குவதுடன், நூல்களின் கருத்து இன்னது என்று மனத்தில் பதிய வேண்டியது இன்றியமையாததாகும். அவ்வாறு பதிந்திருக்கும் பொருள்களைத் தனியே சிந்தித்துத் தெளியவேண்டும். 'பலகலையுங் கற்றுணர்ந்த தெளிவினால்', 'முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்' என நன்னூலார் கூறியிருக்கின்றார். மும்முறை ஒரு பொருளைப் பற்றி சிந்தித்த இடத்தில், ஐய மறத் தெரிந்து கொள்வதுடன், பிறருக்கும் சொல்ல வேண்டிய முறையுடன் எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவான். இவ் விதங் கற்ற கல்வி மனத்தை விட்டு ஒரு நாளும் அகலாது.

'பெற்ற தாய் தனை மக.................கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்' என உம்மை கொடுத்து, மறக்காது என்னும் பொருளில், இராமலிங்க சுவாமிகள் தமது கருத்தை விளக்கி யருளி யிருக்கின்றார்கள்.

தமிழ் மறை யருளி தண் ணருள் செய்த வள்ளுவர், கற்ற கல்வி ஏழு பிறவியில் சென்று உதவி செய்யும் ஆற்றல் உள்ளது என்னுங் கருத்தை,

'ஒருமைக்கட் டான் கற்ற கல்வியொரு வற்கு
எழுமைக்கு மேமாப் புடைத்து'

என்ற திருக்குறளினால் நன்கு விளக்கி யிருக்கின்றார்.

இக் கருத்தினையே, கவிச்சக்கிரவர்த்தி யாகிய கம்பர்

'ஆறிய அறிஞன் கூறி........

....

தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்களெல்லாம்
மாறிய பிறப்பிற் றேடி வருவபோல் வந்த வன்றே'

என்றனர்.

(இதன் தொடர்ச்சி 351-ம் பக்கம் பார்க்க.)

காந்தி யடிகள்

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றெருடர்ச்சி துணர் 23, மலர் 10, பக்கம் 276.)

இந்தியாவின்கண், இவர், ஊர் நாப்பண், புண்ணியக் கனிகள் உதிர்க்கும் செழிய கனி மரம்போ லிருந்ததால், இந்திய அரசிய லமைப்பினைக் குறித்து இங்கிலாந்திலிருந்து பேர் நாட்டும் ஆங்கில அரசியல் அறிஞர்கள் இவருக்கு வட்ட மா நாட்டுப் பேரவைக்காக ஓர் அழைப்பு விடுத்த காலத்து, வறுமை, மடமை, அடிமைப் பிணிகளில் வாழும் இந்திய மக்களை இன்ப வழியில் சேர்ப்பிப்பது தமது உண்மைத் தவ மெனக் கொண்டு, இந்திய அரசிய லறத்தைச், சாந்தம், அமைதி என்ற கனல் கொண்டு நிலைநிறுத்த முற்பட்டார். அற வலிச் செம்மைதனில் வயங்கும் அருளின்ப அன்பமைதி அரசு, அச்ச மழித்து, உலக அமைதியை நிலவச் செய்யு மென்றும், உலக மக்களது பிறப் புரிமை யான சுதந்திர சத்தியை அடக்கும் முயற்சி, முடிவில், போராட்டத்தில் நுழைத்துவிடு மென்றும், இவ்வுண்மையினை, ஆங்கே, அடிகள் விளங்க வைத்தார். மற்றும், அறத்தை நிலைநிற்கச் செய்வது அரசு என்றும், அரசைக் காப்பது அன்பும், அருளு மென்றும், அன்புணர்வும், அருளுணர்வும் மக்கள் பால் நிலவி விரியவே, குடி யரசு இயல்பாய்ப் படர்ந்து வளரும் பான்மையினைத் தெளியவைத்தார். அற நெறி, குடி யரசில், யாவருக்கும் வேற்றுமை யிலாது, அரசியல் நுட்ப உரிமைகளை அளிக்கும் வகையும், செய்கையும் விரும்பினர். இச் செயல் மூலம், வறட்டுத் துறவு தாங்காது, அகத் துறவு பூண்ட துறவோராக அடிகள் உலகுக்குத் தோன்றவே, வினையுலக வாழ்விற்கு இவரை அச்சாணி

யென உலகம் போற்றத் தொடங்கியது. சாந்தியின் தன்மையினை உணராத உலக மக்களுக்கும் இவரது வாழ்வு ஆறுதலளிக்கவே, அன்னவரும் உண்மைக்கு அழிவில்லை யென்பதும், இன்மைக்கு எவ்விடத்தும் இருப்பில்லை யென்பதும் தெள்ளத்தெளிந்து, சுதந்திர சத்தி எக்காலத்தும் தோல்வியுறாது என்ற உண்மையினைக் கண்டு கொண்டனர். இத்தகைய வாறு பெருமை சான்ற இந்திய நாட்டின் பெரு மூதாளர், அரசியலின் கண், தம் அறிவுக் கலையானும், ஆத்துமக் கலையானும் உலகிற்கு ஐக்கிய வழி காட்டிய மென்மை போற்றற் குரித்து.

காந்தி யடிகளது மனம், உலக மக்களுடன் கலந்து, உறவாடுவதை அவாவியதனுன், வாழ்வின் சிறப்ப உண்மையினை அறியும் வாய்ப்பு அடிகளார்க்கு உண்டாயது. இந்திய மக்கள், தம் ஆர்வம் நிறையுறாது, மனப் பிணியும், உடற் பிணியுங் கொண்டு சுமப்பதையும், இன்பம் நுகர அறியாது தயங்குவதையும் அடிகள் கண்டு, வாழ்வுக் கலையும், நாட்டுக் கலையும், விளங்கித் திகழுமாறு, மக்களது உள்ளங்களை ஒரு சேர நிறுத்த முற்பட்டார். கடும் போர்ப் புயலுக்கிடையே, கருணை யாழ் மீட்டி, வகுப்பு, சமயம், நாடு, நிறம் என்ற வேறு பாடுகள் ஒழியுமாறு, உள்ளங்களை ஒருங்கு இணைக்க முயல்வதே காந்தியடிகளின் தத்துவமாகும். எளிய இந்திய நாட்டினை வெறுஞ் சந்தை யாக்கும் நாட்டு வெறியும், அதிகாரப் பேராற்றலும், இந்திய மக்களது பிறப் புரிமையினைப் பறிக்கும் வகையினை யோர்ந்து, இந்திய நாட்டு மக்கள்பால் ஒரு விழிப்பும், சிறை பெறு உணர்ச்சியும் ஏற்பட, மனத் திண்மை, வாய்மை, உறுகண் செய்யாமை, பொறுமை என்ற பண்புகள் கொண்டு, மக்களை அடக்கு முறையால் ஒறுப்பது தகாதெனக் கூறி, அடிகள் அறப் போர் நடத்தி, மக்களிடத்து உரிமை யுணர்வினையும், நாட்டுப் பற்றினையும், பொருளாதார முன்னேற்ற வழி முறையினையும் வளரச் செய்தார். மற்றும், உண்ணு

நோன்பு நோற்றுத், தன் வீரப் பொறுமையால், மக்களிடை வகுப்பு வேறுபாடுகள் மூலம் பரவும் வன்மையினை மாற்றிப், பண் பருது பழகும் தன்மையில் மாருத உள் ளன்பை அன்னவர் பால் நிலைபெறச் செய்து, அவர்களை, அன்பு, அருள், பொறுமை கொண்டு, உள் ளொன்றியே ஒரு குல மாக வாழ வைப்பர். இத் தகைய அன்பு-இன்ப நோன்பு மூலம் தம் மனத் திட்பத்தா லாய வினைத் திட்ப வீறினைப் புலனுகச் செய்தார்.

இவ்வாறு தம் முயிரை அக முகப் படுத்தி மன வீறுற்ற காந்தியார், தமது உள்ளத்தை அன்பு மல ராக்கி யும், தமது வாழ்வினையும் உண்மை நெறியில் செலுத்தி, இறைவனுக்கே ஊனுக்க, இறைவன் மெய்ப் புகழை உள்ள முருகப் போற்று முகத்தான், ஒரு கூட்டத்தினை ஒவ்வொரு நாள் மாலையிலும் கூட்டிவைத்துத், தாம் கைக்கொண்ட இறை மணங் கமழும் உயரிய கொள்கை களின் தத்துவத்தையும், இயல்பினையும் விளக்குவார். இத்தகைய வாறு இறை பணி யாற்றும் தெய்வத் திரு மல ரழகில் தோய்ந்து நிற்க, பல திறப்பட்ட மக்களும் ஒருங்கு குழீஇத், தங்கள் இதயப் பசிக்குச், சோறும், நீரும் போ லுள்ள தாய அவரது வாசகத் தேனை யுண்டு, அவ் வாசகத்து அழகையும், உண்மையினையு மோர்ந்து, அதனைத் தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதி நடக்கும் கடப்பா டுடையராய்த் திகழ்ந்து வருவா ராயினர். இவ்வாறு இறை வன்பால் இவர் உள்ளத்தை வைத்து, ஆத்தும அறிவு மூலம், தம்மை உயர்த்தி, உணவிலும், உடையிலும் அளவும், எளிமையுமா யிருக்கும் ஆக்கமுங் கொண்டு, மனத் துறவு டன், தமது இயல்பிற் கியைய, அன்பு வினைத் தவமு மியற்றி, இறை பணி யொன்றே மக்களுக் குரிய நிறைபணி யென்றும், அஃதே உயிர்க்குத் தூய்மை யளித்து, வாழ்க்கை நிலையினைச் சீர்படுத்து மென்றும், இறை பணி யாற்றல் மூலம் பெறத் தகாத பொருள் யாதொன்று மிலை யென மக்க ளுள்ளத்தில் புத்தொளி பரப்பினர். இஃதோ டமை

யாது, அடிகளார், நாட்டின்கண் படரும் மடமை, வறுமை யிருளை நீக்கவும், மக்கள்பால் அடிமைத் தளை யற்று ஒற்றுமையினை நிலவச் செய்யவும், உலகைத் தாம் அஞ்சாதும், தம்மைக் கண்டு உலகம் அஞ்சாதும், நிலையாமைக்கு நிலைக் களமாய தம்முடலைப் பொருட்படுத்தாதும், இன்பங் கருதி எங்கணும் அமைதி பொலிய அருட் காந்த விளக்காக உலவிச் சென்று, தமது இயல் அறத்தினும், தமக்கு இனிய தொன்று பிறிதில்லை என்று புலப்படுமாறு மௌனச்சுடர் பரப்பி, உயிர்க்கும் கீதையாய் விளங்கினர்.

மக்களிடையே அன்பு-இன்ப நிறைவுடன், தனிமையின் உரிமையினைக் காக்கும் உண்மை யொளி கொண்டு, இறைவன் பால் உறவு கலந்து ஊன்றி வாழும் காந்தியடிகள், மாந்த ருள்ளத்தில் இறைவன் இடங்கொண்டுள்ளா னென்று உணர்ந்து, உண்மை யன்பொடு நேயம் பாராட்டும் பண்பு, தாம் அன்புரிமையுடன் நேசிப்பதைக் கடவுளென மதிக்கு மென்பதூஉம், உள்ளத்தில் விளங்கும் உண்மையே யாவருக்கு முரிய உண்மை யாகுமென்பதூஉம், மாறுபடு சமயப் பூசல் மூலம் பொருமை யுறுவது மடமை யென்பதூஉம் என உண்மை புட மிட் டறிதல் எனும் சத்திய சோதனை யாய வாழ்வு வரலாற்றில் எடுத்துரைத் தருளினர். இவ்வாறு தாம் அரிதின் உணர்ந்த பொருள் நுட்பங்களை ஏனையர் எளிதின் அறிந்து பயனுற, 'அரி மக்கள்', 'இள நல இந்தியா' என்ற வெளியீடுகளுக்கு ஆசிரியரா யமர்ந்து, பொருள் பொதிந்து, அனுபவம் நிறைந்த கட்டுரைகள் மூலம், 'தாமே தத்துவ மதம்' என்ற தத்துவ வெற்றியில் தாம் கொண்ட பற்றுறுதி நிலையினைப் பற்றி, மேனாட்டுப் பேரறிவாளர் ரஸ்கின் என்பாரது உன்னத உரை நடைப் போக்கே போன்று, அற்புதமாக விளக்கி யுள்ளார். மற்றும், அவ் வெளியீடுகளில், வறுமையில் வாழ்வு வெறுமை என்றும், அடிமைத்தளையில் கட்டுண் டிருப்பவன் மனச் சான்றுக்குப் புறம்பாக நடப்பவ னவ னென்றும்,

உண்மை யின்மைக்கு எவ்விடத்தும் உரித்தான இருப்பில்லை யென்றும், அவா, ஆணவச் செருக்கு முதலியவற்றைத் தரும் பணமுடைமையைத் தெய்வ மணம் நாற, அறவினைகளில், பணம் படைத்த மக்கள் காணிக்கையாகச் செய்வது அன்னவர்க் குரிய சீரிய கட னென்றும், தந் நலத்திற்காக இறை பணியில் பழகுதல், களவும், தற்கொலையு மாகு மென்றும், மட்டு வட்டு நீக்கி, மன மாசகன்று, பொறுமையில் மன வொருமை நிலை பெறுதல் மக்கள் வாழ்வின் மாண் புறு பயன் என்பன போன்ற காந்தியார் புகன்ற பொன் மொழிகளே அவ் வடிகளது அறிவுக் கதிர் மணிக ளாகும். மனித மரபு, பயன்கொள்ளும் வண்ணம், சாதி, சமயச் சழக்குக்களால், மடமை - வறுமை - தீண்டாமை இருளில் அழுந்திக் கிடக்கும் இந்திய நாட்டு மக்களுக்கு ஆக்கம் தரும் ஏரும், மானங் காக்கும் இராட்டினமும் என்றும் சுழன்றுகொண்டிருப்பின், குழையும் அன் பின்றிக் குருதிப் போரில்லை யென்றும், இவைகளின் ஆட்ட மில்லையேல், மக்க ளுயிர்க்கும் ஊட்டமும், ஊதியமு மின்று என்றும், உண்மையினை அடிகள் பரப்பித், தன்னுட்சி வாழ்வின் உரிமைக்கு வழி காட்டித், தாமும் வாழ்வின் மாண் பயனை எய்தினு ரென்பது, காந்தியாரது வெளியீடுகளைப் படித்துப் பய னுறும் அறிஞர்தம் ஆய்ந்த முடி பாகும்.

காந்தி அடிகள், பல் துறையுளும் ஆய்ந்த நுண்ணிய புலமை கொண்டு,கற்றவழி நின் ருெழுகி, மக்களுக்குப்பணி செய்யும் தம் கடமையைப் பேணிநின்ருராயினும், இவர் உலகாட்சிக்கு அடிப்படையான உண்மை அறிவுப் பயனைத் தரும் உள்ளக் கல்வி கற்ற இயற் புலமையாளர். இக் காலத்துக் கல்வி முறை மேனுட்டுக் கலை முறையினைப் பின்பற்றி, அறிவு வளர்ச்சியை உண்டாகச் செய்து, வாழ்க்கையில், கிளர்ச்சியினை எழுப்பினும், அது எல்லா மக்களிடத்தும் எளிதே பரவுதற் கேற்ற துணை புரியாது,

தொன்று தொட்டு நமது நாட்டில் நிலவி வந்த கல்வி முறையினையும், கலைப் பண்பினையும் குலைத்து, அறவே ஒழித்துவிட்ட தென்று அடிகள் உணர்ந்தார். அதனால், இக் காலத்துக் கல்வித் திட்ட அமைப்பு நாட்டு மக்களது உள்ளத்தைக் கவர்தற் கேற்ற வளம் பெறாது, அவரது ஆற்றலைப் பீடழித்துப் போகச் செய்த தென்றும், அது, பணம் படைத்த செல்வர்பால் அருமை தோன்ற புலமைத் திறனாக வயங்குகிற தென்றும் அறிந்தார். இக் கல்வி முறை, தனி இலக்கியப் பயிற்சியோடு நின்று, பிற தொழிற் றுறைகளிலும், அறிவுத் துறைகளிலும் வழி வகுத்துச் செல்லாமையான், கற்றோர்க்கு அன்றாட வாழ்க்கைக்குப் பயன் படாது, அல்லலைப் பெருக்குவ தாயிற் றென்ற உண்மையினைக் கண்ட காந்தியடிகள், ஏழை மக்களுக்கும் பயன்படு மாறு, வாழ்க்கைக்கு ஒவ்வும் முறையில் கையாளக் கூடிய ஒரு திட்டம் வகுத்துள்ளார்.

வறுமையினை யொழிக்கப் புதிய கல்வி முறைத் திட்டம் வகுத்த கலைவீரர், உடல், உள்ளம், உயிர் என்ற இம் மூன்றின் வளர்ச்சி இன்றியமையாத தென்றும், அவைகளின் வளர்ச்சிக்குக் கருவியா யிருப்பது நாட்டு மொழியின் அகக் கல்வியும், புறக் கல்வியு மாகு மென்றும் முதற்கண் உணர்ந்தார். அகக் கல்வி உள்ளத்திற்கு வேலையும், பயிற்சியும் தரும். ஆனால், புறக் கல்வி உடல் மூலம் வளரும் மனத்தையும், மக்கட் டன்மையினையும் வளம் படுத்தி, உலகத்திற்குப் பயன்படும் வகையில் உடலைப் பயிற்றுகிறது. உடலும், உயிரும் போன்ற இவ்விரு வகைக் கல்வியும் ஒருங்கே நாட்டுப் பொது மக்கள்பால் நிலவு மாயின், அஃது, உண்டி, உடை, உறையுள் முதலியன பெருக்கும் அறிவு முயற்சியில் மக்களை ஈடுபடுத்தி, அவரது வாழ்க்கையினை நாட்டின் நலத்திற்கே உரிமை யாக்கும் என்பதே காந்தியடிகளது கருத் தாகும். இத் தகைய கல்வி எல்லா மக்களிடத்தும் பரவ, உழைப்பபே ஏற்ற துணையாகும். உழைத்தால் உறுதி

யுண் டென்னும் முயற்சியின் மூலம் பயிலும் கல்வி, வாழ்க்கைக்கு இன்றியமையாத துறைகளில் அறிவுப் பயிற்சியும், உண்மைப் பயிற்சியும் கொடுத்து, மக்களைக் கீழ் நிலையினின்று கைதூக்கி விட வல்ல தாதலின், இத் தகைய கல்வி தான் உண்மைக் கலை யாகுமென அடிகள் அறிவுறுத்தினர். மற்றும், இக் கல்வி முறை அறிவைப் புறப் பொருட் பயிற்சியானும், அகக் கருத்தில் ஆழ்த்துதலானும் விளக்கஞ் செய்தலான், அஃது இக் கல்வியுடையாரை வாழ்க்கையின் கண் ஒளி யுடைய ராகச் செய்யும். வாழ்க்கையின் விளக்கத் திற் குரிய இத் தகைய கல்வி, நாட்டுமக்க ளெல்லாரும் பெரும் பய னெய்தப் பெற்று உரியதா யிருக்க, இலவசமாக வும், கட்டாயமாகவும் வழங்கல் வேண்டு மென்றும் நன்கு நுனித் தறிந்தார் காந்தியடிகள். உழைப்பின் மூலம் உண்டாய தொழிற் றுறை அறிவுப் பயிற்சியே, இலக்கியப் பயிற்சியா லாய கல்வி யறிவுக்கு உறு துணையாயிருந்து, வாழ்க்கை அறிவை உரு வாக்கி, உறு பொருள் கொடுக்கு மாதலான், பொருட் பெருக்கத்திற் கான உழைப்பே கல்வி யென்று அடிகள் வற்புறுத்தினர். இத் தகைய கல்வி முறையால் ஊறும் வருவாய் கொண்டே, இக் கல்வியா லாய நடைமுறைச் செலவினையும், நிலையாய இக் கல்வி முறை நாளடைவில் ஈடு செய்ய இயற்கையாக இயலு மாத லான், இதன் பெருக்கத்திற்கு மாறுபடும் அரசிய லமைப் பின் பணத்துணை தினைத் துணையும் வேண்டுவ தில்லை யென்பர், காந்தியார். பொரு ளியல், உல கியல் ஆகிய இவற்றை ஆய்ந்து தெளியும் கல்வி யிலையேல், யாண்டும் வாழ்க்கையு மில்லை; மெய்ப் பொருளறி வாட்சியுமில்லை என்றும் அடிகளார் விளங்க வைத்தார்.

உண்மைக்காகத் தம் வாழ்க்கையை, தம் துன்பம் பொறுத்தல், பிறர் துன்பம் துடைத்தல், வேட்கை யடக்கல், தந் நய மின்மை முதலாயவற்றுல் புடமிட் டறிந்த காந்தியடிகள், பெருந் தன்மையோடு பணிவாய்த்திகழும்

உயர்ந்த திருவுருவும், தோற்றமு முடையார், உட லழகு டன், மறு வற்ற மன எழிலும் வாய்ந்தவர். இகலொடு செற்றம் நீங்கிய மன நல முடையார். மொழிந்த நெறி நிற்பர். மன ஆற்றல் விளைத்திடும் அறநெறி முறையில் மாறுபடாத நீர்மையர். சாந்தக் கனல் இவரது உள்ளத்தில் என்றும் படிந்திருந்து, உண்மை யொளி பிறங்க, இவரது வாக்கிலும் ஒளி வீசுவதினுன், மக்களுக்கு இவரைக் கண்ட ஞான்று ஒரு மின் மய உணர்ச்சி விம்மி எழும். இவரது வஞ்ச மற்ற திறந்த உள்ளமாகிய அமைதிப் பொய்கையில் ஊறிடும் அன்பு, செயல் மூலம் ததும்பும் பெற்றிமை யுடையது. பிறரை மதித் தொழுகும் மாண்பின் வனப்பை, தெய்வக் கனவோடு கூடிய கருணையால் மிளிரும் இவரது கண்கள் தெளியப்படுத்தும். அழகுச் சுடர் ஒளிரும் இவரது இன் முகத்தில் தவழ்ந்து பொங்கும் புன்னகையில், அரும்பு நகை, மொட்டு நகை, போது நகை, பூ நகை முதலானவை காணப்படும். பெரும்பாலும் மொக்குள் நகை போல், இவரது முகத்து நகை அரும்பில், அன்பு மணம் என்றும் நின்று நிலவும். அன்பினில் விளைந்த நல் வினையும், நல் லொழுக்கமும் இவரது விழுமிய செல்வம். அஞ்சாத மெய் யுறுதியே இவரது தவ வொளி. தீவினையென்னும் தீயினுல் அறம் வாடி மடிந்து, உலரு மாதலான், இவர் தீ வினை யினைப் பற்றிப் பேசார். அதன் சார் பாய வற்றையும் காணுர், கேளார். தீ வினையினைத் துன்னிஞரு மில்லை. செல்வத்திலும் எளிமை சிறந்த தென்பது, இவரது வாழ் வும், வரலாறு மாகும்.

உலகம் இவரது மெய்த் தவச் சாலை. அஞ்சா நெஞ்ச மும், எஞ்சா வன்மையும் கொண்ட எழில் வீர ராகிய இவரது அரியணை, இந்திய மக்களது உள்ளத் தாமரை. உள் ளறி வின்பத்தில் வளரும் வாய்மையே, இவரது செங்கோல். இறைவனது படைப்பு உயி ரினங்கள் யாவும், இவரது செல்வப் புதல்வர்கள். இவர்களுக்கு உயி ரென

விருக்கும் இயல்பின ராகி, அருட் பணி புரிதல் கரும யோக மெனக் கருதி, அடிகளார் பணியினையும், பயனையும் இறைக்கே உரிய வாக்கி, உள்ளத் தெளிவு கொண்டு, பொது நல மெங்கு மோங்க, மக்களை ஒரு குலமாக வாழும் சிறந்த நெறியினைப் புகட்டிக், கீதை நுவலும் சமத்துவத் தைப் புல னுக வைத்தார். அடிமைத் தன்மை யில்லாது தம் முதவி யுணர்ச்சியோடு, அறிவால் உழைத் துண்ணும் நேர்மையை மக்களுக்கு விளங்க வைத்தும், அடிகள், தம் வாழ்வைத் தூய அருள் வேள்வி யாக்கிக் காண்பித்து, உறு கண் செய்யாமையால் அன்பும், அருளும் வளரும் வகையினை உணர்த்தினுர். எனவே, இறை யன்பிற் செழித்த பொறுமையே வில் லாகவும், அறிவிற் கழ காம் அன்பு வினைகளே அம்புக ளாகவும் தம் மகத்தே கொண்டு, கொடிய பகைவரையும் பகையாப் பண்புடைய அருள் முதிர் வீரர், காந்தி யடிகள் எனக் கூறினும் அமையும்.

மனக் கோட்ட மில்லா நேரிய, மாசற்ற சொல்லே அடிகள் சுவைபடக் கூறுவர். இவர் வாக்கினில் அறம் நிலவும். அன்பு கலந் தொளிரும். மனத்தைப் புனித மாக் கும் உண்மை யுரையே வாய்மை என்பது காந்தியாரின் உள்ளம். இத் தகைய உள்ளாழ்ந்த மோனி, வாய்மையே உயர் அற மெனக் கொண்டு, வாழ்வுத் தொடக்கத்தி னின்றே அற வழி யொழுகி, மன, மொழி, மெய்களான் செம்மை காத்தவ ராதலால், அடிகளார், தம் தூய உள் ளத்தின் மூலம் இறையின் மோன எச்சரிக்கையினைக் கேட்டு, மக்கள் யாவரையும் வேற்றுமை யின்றி, இறை வனைத் தலைக்கொண்டு ஒன்றி வாழும் வழியை நாட உணர்த்தினுர். அடிகள் உயர்ந்த கனவில் ஆழ்ந்து கிடக் கும் உள்ள உரனை இயல்பாய் உடைய ராதலான், இவரது வாக்கினின்று பூத்த வாசக மலர்கள் உண்மையி னுற்றல் பெற்று, மக்களுக் கிடையே நறு மணம் பரப்பி, வீறு பெறும் வாழ்வு நிலையினை அளித்தன.

காலப் புலமைக்குக் குழந்தைபோல் உடன்பட்டு நிற்கும் தகைமை யுடைய காந்தியடிகள், குழந்தை மொழியிலும் குலுங்கும் அழகினையும், குழந்தைச் சிறு குறும்பு விளையாட்டிலும் விளையும் உண்மைச் சுவையினையும் நுகர்ந்து, அவரது வாழ்வுக் கலையினைப் பெரிதும் போற்றும் யோகி. குழந்தை உள்ளத்தவ ராதலான், இவர் உலகின் சூது வாதுக்களிடையே தம் முடலையும் மறந்து, உலகம் இறைவன் உறையுள் என்றும், மனிதனே யாவும் எனவும் கொண்டு, மனிதன் என்றும் இறைவன் ஆட்சியில் உள்ளான் என்று உன்னும் அசையாத தன் னம்பிக்கை கொண்டு, 'தாமே தத்துவ வாதம்' என்ற உயரிய உண்மைக்கு உயிர் வாழ்ந்தார். ஐம்பொறியினை யடக்கினதிறனே, மன உரனும், ஊட்டந் தரும் ஐவகை உய் வுறைகளாலாய மொய்ம்பும் கொண்டு, நோ யின் றியன்ற இவர்தம் யாக்கையினை மண்மேல் விடுமாறு கரந்த பகைமை யுடைய பாதகன் — வஞ்சங் குயிற்றும் அருங் கேடன் — தான் நினைந்த பரிசே செய்து, தன் கருத்தினைப் பெருகு சோரி நீ ரெழுந்திட முடித்த ஞான்றும், உடலும் மிகை யென்று மண் ணுலகிலே விண் ணுலகைக் கண்ட காந்தியடிகள், அன்னூனை ஊறு செய்திடல் வீறல தென்று குறிப்பா னுணர்த்த, அவர்தம் இன் னுயிர் துவளம் மேவு துறக்க வானுலகில் செல்லாது, தெய்வ மண முருகு நாறும் அவரது தத்துவங்களில் இடங் கொண்டுள்ளது. எனவே, வளத்தை மிகுப்பித்து உயிர்களைத் தாங்கும் உலகம் உயிரீட்டங்களுடன் நிலை பெற்று நீடு நிலவுவது போன்று, ஆன்ம நிலை யுணர்வால் தம்முயிரில் மன் னுயிரைக் காணும் உண்மை அருளாள ராகிய காந்தியடிகள், உல குள்ளமட்டும் மக்களுள்ளத்தே நாட்டுப் பற்றுத் துடித்துத் திகழ, மக்கள் பால் வாழ்வ ரென்பது சற்றும் மறக் கொணாத தென்க.

வேட்கைப் பத்து

வித்துவான் திரு. மு. சடகோபராமாநுசம் பிள்ளை

மக்கள், தம் உள்ளக் கருத்தினை, முதன்முதல் கை முதலிய உறுப்புக்களைக் கொண்டு சைகைகளால் வெளியிட்டனர். பின், நாள் செல்லச் செல்லச், சிறிது சிறிதாகச் சொற்களைக் கொண்டு கருத்தினை வெளியிட்டனர். இங்ஙனம் தம் கருத்தினை வெளியிடுவதற் குதவிய சொற்களின் கூட்டமே மொழி யெனப்பட்டது. இவ் வரலாற்றுடன் தோன்றிய மொழிகள் மிகப் பலவாம். அவற்றுள், பல்லாற்றானும் பழமை கொண்டது நந் தமிழ் மொழி; பழம் பெருமை வாய்ந்த நம்மொழி, தண்டமிழ் நாட்டு முடியுடை மூவேந்தராலும், வள்ளல்களாலும் காத்து வளர்க்கப் பெற்று வந்தது. எனினும், முத, லிடை, கடை யென்ற மூன்று சங்கமுமே இதனைப் போற்றிக் காத்தது. இந் நிலையில் அக் காலத்து எழுந்த இலக்கியங்கட்கு அளவின்று. ஆயினும், இப்பொழுது நம் கண் முன்னர் விரல் விட் டெண்ணத் தக்க முறையில்தான் அவை உள்ளன. அவை தாமும், பொருட்டொடர் நிலைச் செய்யுளான்றித், தமிழர்களது ஒழுகலாறு முதலியவற்றைத் தெளிக்கும் முறையில், அகப்பொருள், புறப்பொருள், நீதி இவற்றைப் பற்றித் தனித் தனியாகக் கூறும் வகையில் அமைந்துள்ள நூல்களாகவே கண்ணுக்குக் காட்சி யளிக்கின்றன.

வடமொழியில் ஆதி காவியம் என்று சொல்லத் தக்கது வான்மீகி செய்த இராமாயணமே யாம். அதுபோன்றே, தமிழிலும் முதல்முதல் பொருட்டொடர் நிலைச் செய்யுளான் அமைந்த பெருநூல் இருந்தன வாதல் வேண்டு மென்பது அறிஞர் கொள்கை. அவை கால அளவில் கடல் கோளாலும், கறையான் வாயாலும் கரைந்திருத்தல் வேண்டு மென்பதும் அன்னார் முடிபு. இம் முறையில் முத, லிடைச் சங்க காலத் தெழுந்த நூல்களும், கடைச் சங்க காலத் தெழுந்த பெருநூல்களும் மறைந்தொழிந்தன போக, இப்பொழுது காணப்பெறும் நூல்களே எஞ்சியிருந்தன. அவற்றின் முறையினைக் காண்பாம்.

இம்முறையில், கடைச் சங்க காலத் தெஞ்சிய இலக்கியங்களை மேற் கணக்கு*, கீழ்க் கணக்கு என இருபாற்படுத்தினர் இயல் நூற் புலவர். அவற்றுள், நற்றிணை முதலியன மேற் கணக்கு; நாலடி முதலியன கீழ்க் கணக்கு. மேற் கணக்கில் மூன்ருவதாக வைத் தெண்ணப்பெற்றது ஐங்குறுநூறு. இது மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என ஐந்து திணைகளாகத், திணை யொன்றுக்குக் குறைந்த அடிகளை யுடைய நூறு பாக்களை யுடையது. இக் குறைந்த அளவினதாம் ஐந் நூறு பாக்களால் ஆயினமையின் இஃது இப் பெயர் பெற்றது.

இந் நூலுள், மருதத் திணையை முதலாக வைத்துத் தொகுத்த புலவர், புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேர லிரும் பொறையார். இக் கோப்பு முறை, தொல்காப்பிய நூலுக்கு மாறுபடுகின்றது. அவர் 'மாயோன் மேய காடுறை யுலகம்' என முல்லைத் திணையை முத லாகக் கொண்டார். ஆயினும், ஏனைச் சங்க கால அகப் பொருள் நூல்களும் இங்ஙனமே தொல்காப்பிய விதிக்கு மாருகக் கோக்கப்பெற் றிருக்கின்றன. அக் கோப்பு முறை ஒவ்வொன்றும் ஒவ் வொரு கருத்துப் பற்றியது போலும்.

இவ் வைங்குறுநூற்றின் திணைகள் ஐந்திணையும் இயற்றியவர் ஐவரையும்,

மருதம் ஓரம்போகி நெய்தல் அம்மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன்—கருதிய
பாலை ஓதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு.

என்ற வெண்பாவால் அறிக.

இவ் வா றமைந்த மருதத் திணையை அழகு பெறச் செய்ய எழுந்த உறுப்புக்கள் பத்து. அவைகள் ஒவ்வொன்றும் பத்து ஆசிரியப் பாவா லமைந்தன. அப் பத்தினுள்ளும் முதற்கண் நிற்பது வேட்கைப் பத்து. அதுவே யாம் எடுத்த பொருட்கு இலக்கா யுள்ளது.

---

*கணக்கு—நூல். இதனைச் சொல்லிக் கொடுப்பவர் கணக்காயர். ஆயர்—ஆய்பவர். 'கணக்காயர்' எனக் கம்பருங் கூறினர். மேல், கீழ் என்பன பாட்டினது அடிகளின் மிகுதியையும், குறைவையுங் குறித்து நின்றன.

இப் பத்தில் பேசப் பெறும் அரசன், ஆதன் அவினி என்பான். இவனே பிற்றைநிலை முனியாது கற்று வந்த புலவர்க்குப் பற்றுக் கோடா யுள்ளவன். இவன் மரபினரே தண் டமிழ் நா டாண்ட ஒண் டமிழ் வேந்தர் மூவருள்ளும் சிறந்தா ராவர் என்பதனைப் புறநானூற்றுத் தொகுப்பானும், உலக வழக்கானும் உணர்க. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியில் வந்தார் இவரே. இவர்களது வென்றி, கொடை முதலியவற்றின் சிறப்பைப் பதிற்றுப்பத்தால் நன்கு அறியலாம். சேரரைப் பற்றிக் கூறும் பழம் பெருநூ லாகிய இப் பதிற்றுப்பத்தால் தெளிய வேண்டிய செய்திகள் மிகப் பல வாம்.

இத் திணை யாசிரிய ரான ஓரம்போகியார், மருதத் திணை வளங்களை, உள்ளுறை, இறைச்சி முதலிய நயங்கள் தோன்றச் சிறப்பித்துப் பாடுதலில் வல்லுநர். இப் புலவர் பெருந்தகை பாடியனவாக வுள்ள பாக்களை நற்றிணை, குறுந் தொகை, அகம், புறம் என்ற இவற்றுள்ளும் காணலாம்.

இங்குப் பேசப்பெறுகிற வேட்கைப் பத்து, தலைவி, தோழி, ஆயத்தார்களின் வேட்கைபற்றிக் கூறினமையின், இப் பெயர் பெற்றது. இப்பத்து, திருக்குறள் போன்றே, அறத்தை வலி யுறுத்திக் கூறுவது காண்க. அவ்வாறு கூறுவனவற்றுள் சில காண்பாம்.

வாழி யாதன் வாழி யவினி
நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே, யாமே;
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாண ரூரன் வாழ்க
பாணனும் வாழ்க வெனவேட் டோமே

என இதனுள் இல் லறம் இனிது நடை பெறவும், கற் பொழுக்கம் கலங்காமல் இலங்கவும், காவலன் காவல் இன்றி யமையாத தென்பது கருதியே காவல்புரியும் காவலனைத் தொடக்கத்தில் வாழ்த்துகின்றார். 'மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றாம்' என மணிமேகலையினும் வந்தமை காண்க.

வேட்கை, தலைவி வேட்கை, தோழி வேட்கை என இரு பிரிவு படும். அவற்றுள், இங்குப் பேசப் பெறுவது பெரும்பா லாகத் தலைவி வேட்கையே யாம். இப் புலவர் பெருமான் தலைவி, தலைவன், தோழி என்று பண்டையோர் வகுத்த முறையில் படைத்துக் கொண்டு, அவர்கள் வாயிலாக இல்லற வாழ்க் கைக்கு இன்றி யமையாத பொருள்களை வெளியிடும் முறை மிக்க தகுதி யுடைய தொன்றும். ஓர் அறிஞன் நேரே தான் ஆணை யிட்டுச் சொல்வதினும் சிறப் புடைத் தன்றே இம்முறை. இவ் வகையில், கூத்து நூல்களும் நல்லன நாட்டுவதற்கே இல்லன கொண்டு புனைந்துரை வகையால் எழுந்தனவு முள வென்க. மேற் கூறியவற்றைப் பெண்பால் வாயிலாகக் கூறுவது எற்றுக் கெனின், இல்லறம் நடத்துவது பெண்ணல்லவா? பெண்களின் வாயி னின்றும் வருவன பொன் னல்லவா? இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை யல்லவா? அவ்வை போன்ற அருந் தமிழ் மூதாட்டிக்கு ஆதரவு தந்தது நம் நா டல்லவா? ஆதலான், உல கத்தார் விரும்பும் பொருள்களைத் தலைவி வாயிலாக வெளி யிடுகின்றார்.

இங்கு, இவர் கூறிய வேட்கைப் பத்தி லுள்ள பத்துப் பாட் டிலும் பத்து அடிகளே தலைவி கூற்றாக அமைந்தன. அவை:

1. நெற் பல பொலிக பொன் பெரிது சிறக்க.
2. விளைக வயலே வருக இரவலர்.
3. பால் பல ஊறுக பகடு பல சிறக்க.
4. பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக.
5. பசியில் லாகுக பிணிசே ணீங்குக.
6. வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக.
7. அற நனி சிறக்க அல்லது கெடுக.
8. அரசு முறை செய்க களவில் லாகுக.
9. நன்று பெரிது சிறக்க தீதில் லாகுக.
10. மாரி வாய்க்க வளநனி சிறக்க.

என்பனவாம்.

இப்பத்து அடிகளினும், உல கியல் நெறிக்குப் பொருத்த மான இருபது வகை யாகிய சிறந்த கருத்துக்களை வெளியிட்டார். இவைகள் ஒவ்வொன்றும் காரண காரிய முறைப்படி அமைந் தமை காணத் தக்கன.

இனி, ஒவ்வோரடியையும் தனித்தனி காண்பாம். **விளைக வயலே வருக இரவலர்.** என்ற இவ்வடி, சுருங்கச் சொல்லல் என்னும் அழகுடன், தமிழரின் பண்பாட்டைத் தொகுத்துக் கூறுகின்றது. இவ்வாறே மற்றைய அடிகளும் கூறிச்செல்லும். இவ்வடியின் முன்னும் பின்னுமுள்ளனவற்றைத் தொகுத்துக்கொண்டு உரையாசிரியர் கூறுவனவற்றைப் பார்ப்பாம்.

"புறத்தொழுக்கத்திலே நெடுநாளொழுகி, 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு, தலைவியோடு கூடி ஒழுகாநின்ற தலைமகன், தோழியோடு சொல்லாடி, 'யான் அவ்வாறொழுக நீயிர் நினைத்த திறம் யாது?' என்றாற்கு, அவள் சொல்லியது. அஃதாவது:—'காவற் பொருட்டு அரசன் வாழ்க; விருந்தாற்றுதற் பொருட்டு நெற்பல பொலிக; இரவலர்க்கு ஈதற் பொருட்டுப் பொன் மிக உண்டாகுக; எனயாய் இல்லறத்திற்கு வேண்டுவன விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைத்திலள்; அவள் இத்தன்மையளாக, நீ ஒழுகிய ஒழுக்கத்தால் நினக்கும் நின்னொழுக்கத்திற்குத் துணையாகிய பாணனுக்கும் தீங்கு வருமென்றஞ்சி, யாணரூரன் வாழ்க, பாணனும் வாழ்க; என விரும்பினேம்' என்றாள் தோழி" இப்பாவில் வாழ்த்தப் பெறும் பொருள் ஐந்து, அவை, அரசன், நெல், பொன், தலைவன், பாணன் என்பன. இவ்வாறு அரசன் முதலாக வைத்த வைப்பு முறையைச் சிறிது காண்பாம். நாட்டுக்கு நலம் பண்ணி முறை பிறழாது காக்கினல்லது நாடு நலனடையாது என்பது கருதியே அரசனை முதலாவதாகவும், 'உண்டியின் முதற்றே உணவின் பிண்டமும்' என்றபடி உயிர் நிலைத்தற்குக் காரணமாகிய உடலை வளர்க்கின்ற உணவுப் பொருள்கள் பலவற்றுள்ளும் நம் நாட்டில் சிறந்தது நெல்லே ஆதலின், அந்நெல் மிகப் பொலிக என அதனை இரண்டாவதாகவும், இரவலர் முதலியோர்க்கீந்து உவக்கவும், வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவும் பொன் சிறந்த கருவியாமாதலின், அப்பொன்னை மூன்றாவதாகவும், இப்பொன், நெல் முதலிய, நுகர்வாரின்மையிற் சிறப்புறா என்பது கருதி, அவற்றை அனுபவித்தற்குரிய தலைவனை நான்காவதாகவும், தலைவனுக்கு ஏவலனாய்த் தொண்டு பூண்டும், இனிய இசையால் தலைவன், தலைவி முதலாயினாரை மகிழ்வித்தும் வாழ்க்

கையில் இனிமை உண்டுபண்ணும் பாணனை ஐந்தாவ தாகவும் அமைத்த முறை சிறப்புடைய தன்றோ? இங்குக் கூறிய ஐந்தனுள்ளும் பொன்னை நடுவ ணமைத்தமை முன் பின் நின்ற பொருள் நான்கும் அதனு லமையு மென்பது கருதியே யாம்.

இப் பாவி லுள்ள 'யாய்' என்றதற்கு உரையாசிரியர் ஒரு குறிப்புக் கொடுக்கின்றார். அது: 'தலைவியை யாய் என்றது, புலத்தற்குக் காரணமானவை யுளவாகவும், அவை மனங் கொள்ளாத சிறப்பை நோக்கி' என்றார். தன்னைப் பிரிந்து சென்ற தலைவன், மீண்டு வந்தகாலை அவன் செய்த தீமை கண்டு வெறுத்து விலக்க வேண்டிய தலைவி, அங்ஙனம் செய்யா தேற்று உவந்தாள் என்பது உரையாசிரியர் குறிப்புக்கு விளக்கம். இவ்வாறு கூறுவதற்கு உரையாசிரியர்க்கு ஓர் உட்கிடக்கை இருத்தல் வேண்டும். இங்கு உரையாசிரியர் கூறிய கருத் தமைந்த செய்யுளை இத் திணை யாசிரியர் அகநானூற்றுப் பாட்டொன்றில் சற்று விளங்கப் பேசி யுள்ளார். அப் பாட்டே, இவர் நயம்பட உரை வகுப்பதற்கு உதவியது. அது,

தேர்தர வந்த தெரியிழை நெகிழ்தோள்
ஊர்கொள் கல்லா மகளிர் தரத்தரப்
பரத்தமை தாங்கொலோ விலனென வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை
அதுபுலந் துறைதல் வல்லி யோரே
செய்யோள் நீங்கச் சில்பதங் கொழித்துத்
தாமட் டுண்டு தமிய ராகித்
தேமொழிப் புதல்வர் திரங்கு முலைசுவைப்ப
வைகுந ராகுத லறிந்தும்
அறியா ரம்மவஃ துடலு மோரே. அகம். 316.

[இது தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி தலைமகளை நெருங்கிச் சொல்லியது]

இப் பாவின் பண்பாட்டைச் சிறிது காண்பாம். தலைவனிடத்துத் தலைவி கொள்ளும் ஊடல், உணர்த்த உணரும் ஊடலாக அமைய வேண்டும். உணர்த்த உணரா ஊடலாயின், பெருங் கேடு உண்டாம். 'ஊடல் கூடல் உணர்தல் புணர்தலை

நீடு நின்ற நிறைபுகழ் ஆய்ச்சியர்' (நாய்ச்சியார் திருமொழி) என்ற முறையில் ஊடல் இருத்தலே நலம். அதிக முறுக்கு அற்று விடு மன்றோ? எதற்கும் ஓரளவு வேண்டும் என்பவற்றை இதனுட் காண்க. இப் பாவின் பொழிப்புரை, 'தனது தேரில் வந்த ஊர் கொள்ளாத பரத்தையர், பரத்தையரின் தன்மையை மேன்மேலும் தன்பால் எய்துவிக்க, அதனைத் தாங்க முடியாதவனாக உள்ளான் என்று மனை வாழ்க்கை மேவிய கற்புடை மகளாகிய நீ பயனின்றி அவன்பால் ஊடுதல் பொருந்துமா? தலைவன் பரத்தையை விரும்பி இருக்கின்றான் என்பது காரணமாகத் தலைமகனைப் பிரிந் திருக்கும் வன்மை யுடைய தலைவியர் தம்மிடத்து நின்றும் செல்வமெல்லாம் நீங்க, சிறிய அமுதுபடியைத் தாமே புடைத்துச் சமைத் துண்டு தனித்தோ ராகி, தேன் போன்ற இனிய மொழியினை யுடைய புதல்வர்கள்,

'பாலின் மையிற் றூலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தோ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கணென்
... ... மனையோள்'

என்றபடி, பா லின்றிச் சுருங்கிய முலையினைச் சுவைத்துப் பார்க்க எளிமையோடு வறுமை யுற் றிருத்தலை யறிந்தும், தலைவன் பரத்தையோடு தொடர்பு கொண் டுள்ளான் என்பதைக் குறித்து மாறுபடுவோர் அறிவில ராவர்' எனத் தோழி தலைவியைச் சினந்து ஊடலால் வருங் கேட்டினை எடுத்துக் கூறுதல் நோக்குக.

மேற்கண்ட வாறு, அகநானூற்றுப் பாடலில், குலப் பெண்கள் தம் கணவரை மிகுதியும் புலத்தலால் வரும் தீமையை நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றார் இணையாசிரியர். இங்ஙனம் புலவர் கூறிய சிறந்த கருத்துக்கள் பலவற்றையும் தன்னகத் தடக்கிய உரையாசிரியர், 'யாய்' என்றதற்கு 'ஊடுதற்கு உரிய காரணங்கள் பல உள வாயினும் ஊடா திருந்தாள்' என்று நயம்பட வுரைத்தார்.

விளைக வயலே வருக இரவலர்: இவ் வடியில் நாட்டிற்கு விளை பொருளின் இன்றி யமையாமையும், அவற்றால் இரவலரைப் போற்றுதலின் சிறப்பையும் வெளியிடுகின்றார். வயல்

வளம் சுரக்காதாயின் இரவலர்க்குக் கரவா தீவ தொன்றின்மையின், விளைக வயலே என்றார். வருக இரவலர்: இங்கு இரவலர் என்றது தென்புலத்தாரின் வேறுயினுரை. ஆண்களேயன்றிப், பெண்களும் ஈதலில் விருப்ப முடையார் என்பதனை இவ் வடியால் வெளியிட்டார். 'பெண்டிருந் தன்பதங் கொடுக்கும்' என்பதுங் காண்க. 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து, கெடுக வுலகியற்றி யான்' என இரத்தல் கூடா தென்றும், இரந்து வாழ நேர்ந்தால் அங் ஙனம் வாழ அமைத்த கடவுளே தொலையட்டும் என்றும் ஆணை தந்த வாய்மொழிப் புலவரின் கருத்தொடு 'வருக இரவலர்' என்றது மாறு பட்ட தாம் எனின், அவர் தாமே, இல்லற இயலில், 'துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இரந்தார்க்கும், இல்வாழ்வான் என்பான் துணை' எனவும், 'ஈத லறம்' என ஔவையாரும் கூறினமையானும், இல் லறத்திற்கு இயல்பு ஈத லாயினமையானும் மாறு பட்டதன்று. வருக இரவலர் என்றது, 'உரைப்பார் உரைப்பவையெல்லாம் இரப்பார்க் கொன், றீவார்மேல் நிற்கும் புகழ்' என்ற பாவினையே நினைந்து இயற்றியது என்பதும் நோக்குக.

இனி, இவ் வடியை யுடைய பாட்டின் பிற் பகுதியும் அதற்கு உரையாசிரியர் கூறிய குறிப்பும் வருமாறு:—

' ... ... யாமே
பல்லிதழ் நீலமொடு நெய்த னிகர்க்கும்
தண்டுறை யூரன் கேண்மை
வழிவழிச் சிறக்க எனவேட் டேமே'

இதில் தோழி கூற் றாக வுள்ள, இப் பகுதிக்கு உரையாசிரியர் கூறிய, 'தலைவி இல்லறமே நினைந்து ஒழுகுகின்றாள்; யாங்கள் நின் காதல் அவள்மேல் சுருங்குகின்ற திறம் நோக்கி, 'நின் கேண்மை வழி வழிச் சிறக்க' என விரும்பினேம்' என்ற குறிப்பு நூலாசிரியர் கருத்தை நன்கு விளக்கியமை காண்க. உல கியல் முறையில் ஒருவன் ஒழுக்க நெறியி னின்றும் வழீஇத் தவறுபட்ட வழி, சுற்றமும் நட்பும் சூழ இருந்து இடித் துரைத்து நல்வழிப் படுத்த முயல்வது இயற்கை யன்றோ? அம் முறையையே புலவர் இங்குத் தோழி

வாயிலாக வெளிப்படுத்தினர். இவ்வாறு தலைவி, தோழி, ஆயத்தார்களது வேட்கையைப் புலவர் கூறும் முறை, உலக மக்கள் உள்ளத்தைத் தூண்டி ஒழுக்கத்தினைச் செம்மைப் படுத்தும் கருவியாய் அமைந்தமை காண்க. ஒழுக்கம் உயிரினும், ஓதுவதினும் சிறந்த தன்றோ? அதனையே வலியுறுத்துகிறார்.

இனி, 'பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்டுறை யூரன்'

என்ற இவ்வடிக்கு, நீலமலரொடு நெய்தல் மலர் ஒத்து மலரும் தகைமை வாய்ந்த மருத நிலத் தலைவன் என்ற பொருள் நமக்கு வெளிப்படையாகத் தோன்றுமாயினும்,

'உள்ளுறுத் திதனோ டொத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை உவமம்.'

என்ற அகத்திணை விதிப்படி, உள்ளுறை உவமை ஒன்றனையும் அமைத்தார். அஃதாவது, சிறப்புடைய கருங்குவளை மலருடன் சிறப்பில்லாத நெய்தல் மலர் நிகர்க்கும் ஊரன் என்றது, சிறப் புடைய குல மகளிருடனே அச் சிறப் பில்லாத பொது மகளிர் இகலும் ஊரன் என்றவாறு. இவ்வா றமையும் உள் ளுறையை ஒட்டணியின்பாற் படுத்துவர், அணி யியலுடையார். இங் ஙனமே அகத்துறை பற்றிய பாக்கள் பலவற்றுள்ளும் உள்ளுறையாக வருவனவற்றை ஆயின், புலவர்களின் நுண் மாண் நுழைபுலம் சென்ற நிலை அறியலாம்.

பால்பல ஊறுக பகடுபல சிறக்க என்றது பாலாவும், பாலும் மிக்குக், காளைகளும் சிறப்பனவாக என்றபடி. ஒரு நாட்டின் வளம் பாற் பசுவாலும் பகட் டெருதாலுமே சிறப் படைகின்றது. அவற்றைக் கொண்டே அந் நாட்டின் செல்வத்தை அளக்கின்றனர். பாற் பசுவுக்கும், பகட் டினத்திற்கும் மாடு என்ற சொல் அமையும். மாடு என்ற சொல்லுக்குப் பொன் என்ற பொரு ளுண்மையு மறிக. வாழ்க்கைக்கு இன்றியமையாத சிலவற்றைத் தொகுத்துக் கூற வந்த தமிழ்ப் பெரு மூதாட்டி, 'மாடு இல்லான் வாழ்வு' எனத் தொடங்குதலும் காண்க.

இவ்வாறு கூறும் மாட்டுச் செல்வத்தைப் பாலாவும் பகடுமாக இரு கூறாக்கினர் இப் புலவர். பாலாவின் சிறப்புக்

கருதி அதனை முன்னரும், அப் பா லாவின் காரண மாகவே பகடு கள் பல்குகின்ற திறம் நோக்கி அதனைப் பின்னரும் அமைத்தார். இங்குச் சிறப்பித்துக் கூறிய பா லமிழ்தின், பா லாவின் பண்பு பகருந் தர மன்று. ஆயினும், நாவிற்கு விருந்தாகப் பால் அமிழ் தத்திற் சிறிது சுவைத்துக் காண்பாம். பண்டை நாளில் பாற் கடலைக் கடைந்தனர்; அதினின்றும் அமிழ்தம் கிடைத்தது; அது நரை திரை முதலியவற்றைப் போக்கும் ஆற்றலுடையது; அதன் காரண மாகவே தேவாசுரப் போர் நிகழ்ந்தது என்றெல்லாம் கதைகளிற் காண்கின்றோம். அமிழ்தம் என்றால் கண்ணால் காண ஒண்ணாத ஒரு பொருள்; அது இன்று நமக்குக் கிடைக் காது; மறுபடியும் திருப் பாற்கடலைத் தேவாசுரர் வந்து கடைய வேண்டும்; அதனைப் பங்கிடத் திருமால் மோகினி வடிவந் தாங்கி வரவேண்டும் என்றெல்லாம் எண்ண வேண்டுவதின்று. தேவர்க் கும் திருமாற்கும் பெருந் தொல்லை தர வேண்டுவது மில்லை. நம் வீட்டில் பாட்டி கடையும் தயிரி னின்றும் தாழியுள் திரண்டு உருண்டு வருகிற ஒரு பொருளைக் காணுகிறோமே அது தான் அமிழ்தம். அதனை நாம் வெண்ணெய் என்கிறோம். இதே பொருள்தான் பாற்கடலில் கிடைத்ததும். பாலைக் கடைந்தால் வெண்ணெ யன்றி வேறென்ன வரும்? அதன் சிறந்த பண்பாட் டைக் கருதி, வெண்ணெயை அமிர்தம் என்றனர் வடவர். அமிர் தம் – சாதலைத் தடுப்பது. இச்சொல், அமிழ்தம், அமுதம் எனத் திரிந்து வழங்கும்.

இதன் பண் பாடு: குழந்தைகள் வளர்வ தற்கும், கொள்ளை நோய் தணிவற்கும் பாலமிழ்த மன்றோ பயன் படுகிறது, காளை வளர்ந்து கடுந் தொண்டு புரிவதும் இதனா லன்றோ? 'பீரம் பேணி பாரந் தாங்கும்' என்பது பெரு மாட்டி பேச்சு. பழி பாவத்துக் கஞ்சாது, கன்றுக்குப் பால் விடாது கறந்து காசைப் பெருக்க நினைத்து, முதலும் இழக் கின்றனர். 'ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை, யூக்கார் அறிவுடை யார்' என்ற அமிழ்த வாக்கையும் அறியா ராகின் றார். பால் விலை எவ் வள வானாலும், பகட்டின் விலைக்கு இணை யாமா? 'கலப் பால் கறந்தாலும் கன்றின் விலை யாகாது' என்ப தன்றோ பழமொழி. தோல் கன்றைக் காட்டித் தாய்ப் பசு வை ஏய்த்துக் கறக்கும் கன் னெஞ்சரும் இல்லாம லில்லையே.

'கார்த்திகை மாதத்தில் கன்றுந் தாயும் பல்கபல்க' எனப் பறை யறையும் பொங்கல் விழா வாழ்த்தொலியும் இவர்கள் காதில் ஏருதோ? இவ் வாறு சிந்திக்கத் தக்க பாலாவின் பண்பாட் டைப் பகர வந்த பெரியோர்கள்,

விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாட் டொட்டுஞ் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோ டருள்சுரந் தூட்டும்
—மணிமேகலை.

'கடுஞ்சுரையா நானன்கு, குடஞ்சுட் டினத்தாற் கொடு'
—புறப்பொருள் வெண்பாமாலை.

'தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
'நீங்காத செல்வம்'—திருப்பாவை
'சேதா நறுமோர் வெண்ணெய்'—பெரும்பாணற்றுப்படை.

எனப் பசுவின் இயற்கைப் பண்பையும், அதுவே நாட்டிற்குச் செல்வ மாம் சிறப்பையும், அதன் மோர் வெண்ணெயின் இயல்பையும் கூறு மா றறிக. மிக்குப் பால் கறக்கும் பசுவை 'வள்ளல் பெரும் பசு' எனக் கூறும் நயமும் காண்க. இவ்வாறு நிறையக் கறக்கும் பசு மிகுதியாகப் பெருக வேண்டும் என்பார் 'பால் பல ஊறுக' என்றார். இக் கூறியாங்கு நன்ருகக் கறக்கும் பசுவினுக்கு அமைந்த குறிகள் பத்து என்று விலங்கு நூலார் கண்டார். அவை:

1. கொம்பு வளைந் திருத்தல்,
2. காதின் உட் புறம் சிவந்திருத்தல்,
3. பால்தாரைகள் பருத்து முன் காலளவில் சென்றிருத்தல்
4. கறந்தவுடன் மடி நன்ருகச் சுருங்கி விடுதல்,
5. மடியில் காம்புகள் சம அளவி லிருத்தல்,
6. காம்புகள் அடி முதல் நுனி வரை ஒத்த கன மாக நீண் டிருத்தல், (அஃதாவது நுனி கூம்பாதிருத்தல்)
7. நடக்கும் பொழுது பின்காலை அகல வைத்தல்.
8. பூமியைத் தொடும்படி வால் நீண் டிருத்தல்.

9. இடை கனத்திருத்தல்.

10. சுரப்பு நன்று யிருத்தல்.

(கறந்த காம்பில் பின்னரும் பால் சுரக்கா திருத்தல்)

என்பன காண்க.

பகடு பல சிறக்க : பகடு சிறத்த லாவது, பண்டும் இன்றும் உழவுத் தொழிலைச் சிறப்புறச் செய்து வளம்படுத்தியது, படுத்துவது பகடன்றோ? நெல்லுங் கரும்பும் நிமிர்ந்து வளம் பெறுவதற்கு அடிப்படையாக உள்ளது உழவன்றோ? அவ் வுழவுத் தொழிலை நிலைபெறச் செய்வது பகடல்லவா? இப் பகட்டின் சிறப்பினை உணர்ந்த வள்ளுவர், இடுக்கணழியாமைக்கு உவமையாக எடுத்து, 'மடுத்த வாயெல்லாம் பகடன்னான்' என்றார். இவ் வுவமையை விளக்க வந்த பரிமேலழகர், 'பகடு மருங்கு ஒற்றியும் மூக்கு ஊன்றியும் தாள் தவழ்ந்தும் அரிதின் உய்க்குமாறு போலத் தன் மெய்வருத்தம் நோக்காது முயன் றுய்ப்பான் என்பார் 'பகடன்னான்' என்றார்' எனக் கூறினார்.

பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க —நாலடி

குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்
நடைநவில் பெரும்பகடு புதவில் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்
உடும்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
—பெரும்பாணாற்றுப்படை.

என்ற தொடர்களால் பகட்டாலாம் உழவின் சிறப்பினை யுணர்க.

மிகப் பழங் காலத்து வாணிபம்* பகட்டின் முதுகின் மீதே நடந்தது. அஃதாவது, பொருள்கள் திணிக்கப் பெற்ற மூடை

---

* இவ் வாணிபம் கழுதையின் மீதும் கொண்டு நடந்தது. அதனைத்,

'தடவு நிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியல்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்'

எனவரும் பெரும்பாணாற்றுப்படை யடிகளால் அறிக.

களைப் பகட்டின் முதுகின்மீது கொண்டு, அதனை ஊரூராய் ஓட்டிச்சென்று வாணிபம் செய்தனர். இவ் வாறு வாணிபம் செய்த குழுவைச் சாத்து என்றனர். இம் மூடையைத் தாங்கிச் செல்லும் பகட்டைப் 'பொதி மாடு' என்றனர். இவ்வாறு பொதிமாட்டைக் கொண்டு வாணிபம் செய்த புலவர்களும் உண்டு. அவர்கள் கூல வானிகன் சாத்தனுர், சீத்தலைச் சாத்தனுர் என்பவ ராவர். இவ் வாணிபத்தைக் குறிக்கும் சாத்து என்ற சொல், அதனை யுடையானைக் குறிக்கும் போது, சாத்தன் என்ருயிற்று. இச் சொல்லே இலக்கணத்திலும் நுழைந்தது. சாத்தன் வந்தான் என அதனையே மேற்கோளும் காட்டினர். இதனுன் சாத்து வாணிபத்தின் தொன்மை புலப்படும். உள்நாட்டு வாணிபத்தைப் பகட்டின்மீது நடத்திவந்த குழுவைச் சாத் தென்றது போலவே, வெளிநாட்டுடன் கடலில் கப்ப லோட்டி நடத்திய வாணிபரை **நாய்கர்** என்றனர். கண்ணகியின் தந்தையை மாநாய்கன் என்றலுங் காண்க. கடல் கடந்த வாணிபத்தில் பொருள் திரட்டியவன் **கண்ணகியின்** தந்தை. இச் சிறந்த வாணிபனின் மகளான கண்ணகியைக் கோவலன், 'மாநாய்கன் குலக்கொழுந்தே' எனப் பாராட்டினுன். மாநாய்கன், மாசாத்துவான் என இருவரும் நீரினும் நிலத்தினும் நிகழ்த்திய வாணிபத்தால் பெரும் பொருளீட்டியவராவர். இது நிற்க.

முன் கூறியாங்குக், காளையின் முதுகின்மீதிருந்த வாணிபம் கால அளவில் அதன் கழுத்தில் வந்தது. அஃதாவது, வண்டியில் பொருள்களை ஏற்றி வாணிபத்தை நடத்தத் தொடங்கினர். ஆனுல், இப் பொழுது காணப் பெறும் பண்டி வேறு. முன் னிருந்த பண்டி வேறு. முன்னது ஈரச்சில் ஈ ரிரண் டுருளை கோத்து, நான்கு பகட்டிற்குக் குறையாத வகையில் பூட்டி யோட்டப்பட்டது. இவ்வாறு இரண்டிற் கதிகமான மாடுகள் பூட்டி ஓட்டுவதனை இக் காலத்தார் 'பாந்து மாடு' என்பர். அதனை,

> 'சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த
> பெருங்கயிற் ருழுகை மருங்கிற் காப்ப'

என வரும் பெரும்பாணுற்றுப்படை யடிகளால் உணர்க.

இப் பண்டியை முன்னவர், 'ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்', 'பீலிபெய் சாகாடும் அச்சிறும்' எனச் சகடம், சாகா டென்ற பெயரால் குறிப்பிட்டனர். முன் இருந்த அச் சகடம், இப் பொழுதும் கோயிலில் காணப் பெறுகின்றது. அதனைச் 'சகடை' என அழைக்கின்றனர். இப்பொழுது காணப்பெறும் பண்டியை யாவரும் அறிவர். இப் பண்டி, இப் பொழுது காணப் படுகின்ற வடிவில் பதினைந்தாம் நூற் றுண்டிற்குச் சற்று முன் பின்னுகத் தான் தொடங்கி யிருக்க வேண்டு மென்பது வரலாற் றுண்மை. அதிவீரராம பாண்டி யன் பதினைந்தாம் நூற்றுண்டவன். அவ னியற்றிய நைடதத் தில், 'பற்பலர் நெற் பண்டியிற் கொண்டு தொகுப்பர்' என வரு வதால், இதனை அறியலாம்.

இவ் வாறு சாத்தினும், சாகாட்டினும் நிகழ்ந்த வாணிபம், புகை வண்டி முதலியவற்றின் வழியாகப் பன் னெடுங் காவதம் கடந்து வந்து நடைபெறுகின்றது. இவ் வாணிபத்திற் குரிய சாதனக் கருவிகள் பல வந்தாலும், பகட்டால் நடக்கும் தொழில் பாழ்படாது. வாணிபத் துறையில் இவ்வாறு சிறு மாறுதல் ஏற்பட்டிருக்கின்றதே ஒழிய, உழவுத் தொழிலில் துளி மாறுதலு மின்று; காரணம், நம் நாட்டின் பூமி சம வெளி யின்மையே யாம். இவ்வாறு பல் லாற்றுனும் உழவு, வாணிபம் ஆகியவற் றிற்குப் பகடு காலால் நடந்தே தன் பணியைச் செய்யும் திறம் நோக்கி, நம் முன்னோர் பகட்டைக் 'கால்நடை' என்றனர். காலால் செல்லும் ஏனைய பொருள்கள் உள வாகவும், பகட் டைக் கால்நடை என்றது அதன் பயன் கருதியே யாம்.

வித்திய உழவர் நெல்லொடு பெயரும் என்றது மருதத் திணையின் சிறப்பு நோக்கிப் போலும். பெயரும் என்ற துணை யானே வீண் போகா தென்பது பெற்றும்.

பூக்கரு ஊரன் தன்மனை வாழ்க்கை பொலிக என வேட் டோமே = பூக்கள் நெருங்கி மலரும் தகையன வான மருத நிலத் தலைவனது மனைவாழ்க்கை யானது விளக்க முறுக என விரும்பி னேம் என்றபடி. ஊரன் என்றது மருத நிலத் தலைவனை என் றுணர்க. இதனுள், 'தன்மனை வாழ்க்கை பொலிக', என்ற

பகுதி மிகவும் சிறப்புடையது.

'பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.'

என்றபடி, தன் மனை வாழ்க்கை பொலித லாவது, தான் தேடிய பொருளைப் பலர்க்கும் பகுத்துக் கொடுத்ததனால் வரும் சிறப்பு, இன்பம் இவற்றை அடைதல் என்றவாறு. தான் தேடிய பொருளைக் கொண்டே தலையாய அறத்தைச் செய்தல் வேண்டும். அதனால் வரும் இன்பமே மிகப் பெரிதாம். தலைவி யின்பால் தோன்றிய இன்பத்துக்கு உவமை கூற வந்த பெரியார்;

'தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.'

எனத் தன் மனை வாழ்க்கையில் தான் தேடிய பொருளைப் பலர்க்கும் பகுத் துண்டலை உவமை கூறுகிறார் என்றால், இதன் திறத்தினைச் சிந்தித்தல் வேண்டாமோ? வள்ளுவர் நோக்கு எப்பொழுதும் ஒன்றில் இரண்டை அடக்கிக் கூறுதலிலேயே நிற்கும். இங்குத் தலைவியின் இன்பத்தையும் வெளிப்படுத்த வேண்டும், அதன் வாயிலாக உலகிற் கோர் அறத்தையும் வெளியிட வேண்டும். அம் முறையில் எழுந்ததே இக் குறள். இவ்வாறு உவமை சிறப்புடைய தென்பது;

'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை'

என்ற நூற்பாவால் தெளியலாம். 'தான் தேடாத பொன் னுக்கு மாற்றில்லை' என்பது பழமொழி. ஆகவே, தான் தேடிய பொருளைக் கொண்டு அறவோர்க் களித்தல், ஆருயி ரோம்பல், துறவோர்க் கெதிர்தல் முதலானவற்றைச் செய்தல் வேண்டு மென்பது கருத்து.

பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக: பகைவர் தோல்வி யுற்றுப் புல்லைப் பறித்துத் தின்றிடுக; பார்ப்பார் ஓதுவாராக என்றபடி. பகைவர் புல லார்தல் தோலவிக் குறிப்பு. 'புன் மேய்வார்' என்ற சிறுபஞ்சமூலமுங் காண்க. பகைவர் நாட்டில் தொலையி னன்றிப் பகைமை நீங்காது; பகைமை நீங்கி னன்றி அமைதி நிலவாது. பகைமை காரண மாகவே பெரும் பாலும் படை யெடுப்பு நேர்கின்றது. அவ்வாறு நேர்வதால்

குழப்ப மிக்குக், குடிகள் அலைக்கப் பெறுகிறார்கள். அதனால், நாட்டில் நிலைத்த செயல் எதுவும் நிகழாது. ஆறிலிருந்து பதின் மூன்றாவது நூற்றாண்டுவரை தண்டமிழ் நாடு முடியுடை மூ வேந்தரால் ஒருவகையில் குழப்ப மின்றி ஆளப்பெற்று வந்தது. அக் காலத்து எழுந்த சிற்பக் கலை, ஓவியக் கலை, இலக்கியம், கற் கோயில், கடல் கடந்த வாணிபம் முதலியன, பகைவர் புல் லார்ந்து இருந்தமையைப் புலப்படுத்தும். ஆளத் தெரியாத, ஆற்ற லில்லாத சிலர், பே ரரசர் வழியில் தோன்றினர். 'ஆ ளல்லான் செல்வக் குடியுள் பிறத்தலும்' என்றபடி இவ் வழித் தோன்றல்களால் ஆட்சி குன்றியது. குறும்பர் தலை தூக்கினர். வேற்றவர் வருகை மலிந்தது. வெளி நாட்டினின்றும் வந்த கசினி, தாய்மூர் போன்ற கொடியவர்கள் படைஎடுப்பால் வட நாடு சீர் குலைந்தது. அதன் அதிர்ச்சி தென் னாட்டுள்ளும் பரவியது. அதுமுதலே தமிழ ராட்சி தொலையத் தொடங்கிய தெனலாம். சில தமிழர்கள் சிற்சில பகுதிகளைத் தங்கட் குள்ளாக்கிக் கொண்டு, குறு நில மன்னர்களாய், வலியின்றி வாழ்ந்தனர். அவர்களால் பெருஞ் செயல் எதுவும் செய்ய இயல வில்லை. இயலா தென்பதும் வரலாறு கண்ட வுண்மை. அண்மையில் நிகழ்ந்த பெரும் போர் எத் துணையோ ஆயிரங் காத வழிக் கப் பால் நிகழ்ந்தது. ஆயினும் நம் நாட்டையும் ஆட்டிவைத்தது. ஆதலா னன்றே, 'பகைவர் புல்லார்க' என்றார்.

'பார்ப் பார் ஓதுக' என்றது, 'ஆபயன் குன்றும் அறுதொழி லோர் நூன்மறப்பர், காவலன் காவா னெனின்' என்ற அமுத வாக்கொடு ஒத்திருத்தல் காண்க. இப் பாவிலேயே இனி யொன்றும் காண்டற் குரியது. அது,

'யாமே
பூத்த கரும்பிற் காய்த்த நெல்லில்
கழனி யூரன் மார்பு
பழன மாகற்க எனவேட் டோமே'

என்றாள் தோழி. இப் பாவினுள்ளும் தோழி கூற்றாக அமைந்த ஓ ருள்ளுறை காண்க. பூத்துப் பயன்படாக் கரும் பினையும், காய்த்துப் பயன்படும் நெல்லினையும் உடைய ஊரன், என்றது, ஈன்று பயன் படாப் பொது மகளிரையும், மகப் பயந்து பயன்படும் குலமகளிரையும் ஒப்ப நினைப்பான் என்றபடி. இத்

திணை ஆசிரியர், பயன் படும் குலமகளும், பயன் படாப் பொது மகளும் ஒரு தன்மையர் ஆனால், இல் லறத்தின் சீர்கேடு மிக் குண்டாம் என்பதனைக் குறிப் பாக அமைத்தார். ஆம் முறை எண் ணி யெண்ணி சுவைக்கத் தக்கது.

இதில், கழனி யூரன் மார்பு பழன மாகற்க என்றது, அவன் மார்பு ஊரவர்க் கெல்லாம் பொது வாகிய பழனம் போலாது, இவளுக்கே உரிமை யாகுக என்றவா று. பழனம் ஊரார்க்குப் பொது வாகிய இடம். பழனம் ஆகற்க என்றதனுளே, இவன் தன் மனையி னீங்கி வரைவின் மகளிரை விழையா து, தன் மனையி லிருந்து இல் லறம் இனிது நடத்துவா னாக என்பதும் காண்க.

பசியில் லாகுக பிணிசே ணீங்குக : நாட்டில் மக்கள் பசியி னின்றும் நீங்குவார்க ளாக. அவர்களை விட்டுப் பிணி தொலைவ தாக. இதில், பிணி யென் று தனியே கூறினும், பசியின் கொடுமை கருதி வாய்மொழியார் 'பசியென்னும் தீப்பிணி' என்றார். இவர் பிணி என் றதனோடு அமையா து, தீப் பிணி என் றது, இதன் கொடுமை கருதி என் றுணர்க. ஏனைய நோய்க்கு மருந்து கொடுப் பின், அது தொலைந்தே விடும். ஆனால், பசிப் பிணி உணவுப் பொரு ளாகிய மருந்து கொடுப்பினும், தணியா து, பின்னரும் பற்றி வரு மாதலின், தொலையாப் பிணி யெனக் கருதி, இதனைத் தீப்பிணி என்றாரு மாம். உணவு இன்மையான் வருகின்ற பசிப் பிணி வாத பித்த முதலியவற்றான் வரும் பிணியினும் மிக்க தீங்கு தரும் என்பதனை நன் குணர்ந்தே நம் முன்னோர்கள் பல படியாகக் கூறிப் போந்தனர். அவற்றுள் ஒரு சில காண்பாம்.

குடிப்பிறப்பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்வி பெரும்புணை விடூஉ
நாணனி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது
... ...
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை. மணி. 11, 80.

பசிப் பிணி மருந்து — மணி. 28, 217.

நோயொடு பசியிகந் தொரீஇ — பதிற். 13, 27.

பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே — புறம். 173.

பசிப்பகை கடிதலும் வலியன் — ,, 400.

பசிதினத் திரங்கிய வொக்கலு முவப்ப — ,, 159.

பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை — புறம் 160.

புரவல ரின்மையிற் பசியே — ,, 66.

உண்ணு மையின் ஊன் வாடித்
தெண் ணீரிற் கண் மல்கி — ,, 136.

காரென் ஒக்கல் கடும்பசி இரவல — ,, 141.

கடும்பின் கடும்பசி — ,, 163.

கடும்பசி கலக்கிய இடும்பைகூர் நெஞ்சமொடு — ,, 230.

எனப் பலவகையில் பசியின் கொடுமைகளை பகுத்துக் கூறிய புலவர்கள் வாக்கி லிருந்து இதன் கொடுமையை நன்குணரலாம். இதன் தீமையை நன்குணர்ந்த பெரியோர்கள் அன்ன சத்திர மாயிர மாயிர மெடுத்தனர்.

பசியால் பிணி வருவது பெரும்பாலாக இருப்பினும், ஏனைய வாத பித்த முதலியவற்றால் வரும் பிணியும் தொலைய வேண்டுவ தின்றியமையாத தன்றோ? அதனை நோக்கியே, 'பிணிசேணீங்குக' என்றார். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதுங் காண்க. உணவுப் பொருள் கிடைக்காத காரணத் தால் நோயுற்று வருந்தி இறந்தார்கள் பல்லாயிரக் கணக்கான மக்கள். இதனை அண்மையில் நிகழ்ந்த போரின் விளைவால் வங்கம் முதலான இடங்களில் கண்டாம்.

வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக: அரசன் பகைமையி னின்றும் ஆறிப் பல்லாண்டு வாழ்வா னுக என மங்களா சாச னம் செய்கிறார். முன்னர், பகை ஒழிக என்றவர், இங்கு, வேந்து பகை தணிக என்றது, அரசன் தானே தன் சினத்தை அடக்கிப் பகைமையைப் போக்கிக் கொள்ளல் வேண்டுமென்பது கருத்து. பகைமையை ஏது வாகக் கொண்டு பிறர் மண் வவ்வலே தன் அலுவ லாக என்று நிற்பின், என்றும் நின்று நிலவத் தக்க சிறந்த செயல் எதுவுமே நிலவுலகில் ஆற்ற இயலாதுபோம். அன்றியும், பொறி வாயி லைந் தவித்த புனிதன் மாட்டு அன்பு பூண்டு உயிர் நுகர்வதற் குரிய நிரவதிசய இன்பத்திற்கு ஆவன வற்றையும் தேடாதவ னுகின்றான். பகை தணிந்து உயிர்க்கு ஆக்கந் தேட வேண்டும் என்பதனைச் செங்குட்டுவற்கு, மாடலன் வாயிலாக, நம் சேர முனிவர்,

வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினை

... ...

நரைமுதிர் யாக்கை நீயுங் கண்டனை
விண்ணோ ருருவி னெய்திய நல்லுயிர்
மண்ணோ ருருவின் மறிக்கினும் மறிக்கும்
மக்கள் யாக்கை பூண்ட மன்னுயிர்
மிக்கோய் விலங்கி னெய்தினு மெய்தும்
விலங்கின் யாக்கை விலங்கிய வின்னுயிர்
கலங்கஞர் நரகரைக் காணினுங் காணும்
ஆடுங் கூத்தர்போ லாருயி ரொருவழிக்
கூடிய கோலத் தொருங்குநின் றியலாது
செய்வினை வழித்தா யுயிர்செலு மென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை யாதலின்

என்று கூறுகின்றார். இவ் வடிகளில், தாம் துறவி என்பதற் கேற்ப, மிக அழகாக உயர்ந்த செயலை வெளியிடுகின்றார். வேம்புங் கடுவும் போல் வெஞ்சொல் தாங்குதலின்றிச், செவி யறிவுறுக்கும் முறை மிகச் சிறந்த தன்றோ!

யாண்டுபல நந்துக: ‘நெல்லும் உயிரன்றே நீரும் உயி ரன்றே, மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்’ என்றபடி அரசன் உலக மக்கட்கு உயி ராகவும்,

வயிரவான் பூணணி மடங்கல் மொய்ம்பினான்
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலால்
செயிரிலா வுலகினில் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினான்

பாலகாண்டம். அரசியல். 10.

என்று கம்பர் கூறியபடி, மக்கட்கு அரசன் உட லாகவும் நின்று உலகம் காத்தலின், சிறப்பு நோக்கி அவனை ‘யாண்டு பல நந்துக’ என்று வாழ்த்துகிறார். நந்துதல்-வாழ்நாள் வளர்தல். இவ் வாறே மற்றை யோரும்,

யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய புறம். 173.

வண்டார் கூந்தல் ஒண்டொடி கணவ!
நின்னாள் திங்கள் அனையவாக, திங்கள்
யாண்டோ ரனைய வாக, யாண்டே
ஊழி யனைய வாக, ஊழி
வெள்ள வரம்பின வாக பதி. 90

எனக்கூறு மாற்றானும் அறிக. முறை செய்து கோ லோச்சு மன்னவன் உலக மக்கட்கு இறை யாதலான், அவனை வாழ்த்து கின்றார்,

இனி, இப்பாவில், ‘வேந்து.........என வேட்டோளே யாய்’ என்றதற்கு, உரையாசிரியர், ‘ஈண்டுத் தலைவியை யாய் என்றது, எதிர்ப்பட்ட ஞான்றே கற்புப் பூண்டு ஒழுகுகின்ற சிறப்பு நோக்கி என்க.’ எனக் கூறுவது காண்க. இவ்வாறு பொற்புடை மகளிர் கற்பைப் பாராட்டி யிருப்பது தமிழர்களின் ஒழுக லாற்றின் சிறப்பை யுணர்த்து மன்றோ?

அறம்நனி சிறக்க அல்லது கெடுக:

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி யினிய செயின்

என்ற குறளைச் சுருக்கிக் கூறியது போன்றமைந்தது இவ்வடி,

ஒளி வர இருள் மாயும், நல்லன செய்யின் அல்லன தொலை யும், கன்னுன் நடமாடக் குயவன் குடிபோவான் என்ற பழ மொழிகளும்,

வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
—பெரும்பாணுற்றுப்படை.

வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்ருேர் பலர்யான் வாழு மூரே —புறம்.

என்ற பாக்களும் இவற்றை வலியுறுத்தும். இன்னும் இத் திணை யாசிரியர் தாமே, அகநானூற்றுள்ளும்,

கேட்டவை தோட்டி யாகமீட் டாங்கு
அறனும் பொருளும் வழாமை நாடித்
தன்தக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னு கும்மே முன்னியது முடித்தல்
அனைய பெரியோர் ஒழுக்கம்

எனக் கூறிய வாற்ருல், இவர் அறத்தினும் ஒழுக்கத்தினும் எத் துணை கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிருர் என்பது விளங்கும்.

இனி, இப் பாவில் வரும் திருமருத முன் துறையைக் காண் பாம். 'உளைப்பூ மருதத்துக் கிளைக்குரு கிருக்கும், தண்டுறையூரன்' என்றது, உள்ளே பஞ்சையுள்ள பூக்களை யுடைய மருத மரத்து இனத்துடன் கூடிய நாரை தங்கி யிருக்கும் தண்ணிய துறைப் பகுதியை யுடைய ஊரன் என்றவாறு. இதில், மருதத்துத் தண் துறை என்பது, மதுரை மா நகரில், வையை யாற்றில் ஒரு துறை. இது திருமருதமுன்துறை என்ற பெயருடன் பழைய நூல்களில் பயின்று வழங்கும். அவற்றுள் சில:

முடமுதிர் மருதத்துப் பெருந்துறை ஐங்குறு. 31.

மருதுயர்ந் தோங்கிய விரிபூம் பெருந்துறை ,, 33.

கரைசேர் மருத மேறி ,, 74.

செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்றவ ரூரே குறுந். 50.

திசைதிசை தேனார்க்கும் திருமருத முன்றுறை கலி. 26.

உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து புறம். 195.

மருதிமிழ்ந் தோங்கிய நளியிரும் பரப்பின்
மணன்மலி பெருந்துறை பதிற். 23.

வருபுனல் வையை வார்மண லகன்றுறைத்
திருமரு தோங்கிய விரிமணற் காவின்
நறும்பல் கூந்தல் குறுந்தொடி மடந்தையொடு
வதுவை யயர்ந்தனை யெனின் அகம். 36.

கடைகழி மகளிரொடு காதலஞ் செல்வரொடு
வருபுனல் வையை மருதோங்கு முன்துறை
— சிலம்பு. 14, 71- 72.

என வரும் அடிகளான், திருமருதத்துறை, பல புலவர்களால் பாராட்டப்பெற்று, மதுரையில், வையை யாற்றில் சிறப்புற்றிருந்த தென்பது வலியுறும். இத் துறை யுடைமை காரணத் தானே, இவ் வூரை, முன்புள்ளார்கள் மருதை என்றனர். பின்புள்ளார் மதுரை யென்றனர். மருதை, மருதத் துறை என்பதன் மரூஉ வாம். இனிமை என்ற பொருளைத் தரும் மதுரம் என்ற சொல் மதுரை என மருவியது. சிந்தைத் கினிய, செவிக் கினிய தண் தமிழ் வளர்ந்து வாழ்ந்த இட மாதலின், அதனை மதுரை என் றழைத்தனர் போலும். மருதை, மதுரை என்ற சொற்கள் தம்முள் பொருளில் வேறுபா டுடையன. இவ் வூர்க்கு' முற் காலத்து மருதை என வழங்கியமையை, இன்றும் சிலர் மருதை எனக் கூறு மாற்றா னறியலாம். சிலர், மதுரை என்ற சொல்லை வழங்கத் தெரியாமல், மருதை என்கிறார்கள் என்கின்றனர். இன்னும், சற்று நாகரிகம்மலிந்த நகரத்தாரிற் சிலர், மருதை என்று கூறின் நகைப்பர். குருதை வாங்கிவா எனவும் இகழ்வர். இங் ஙனம் இகழ்வது குதிரைக்கும் குருதைக்கும், மருதைக்கும் மதுரைக்கும் வேறுபாடு அறியாதார் கூற்றேயா மென்க. குருதை, குரு என்ற சொல்லடியாகப் பிறந்து, அதன் நிறத்தை உணர்த்தி, அப் பொருளுக்குப் பெயராய் அமைந்தது. குதிரை,

குதி என்ற ஏவற் பகுதி யடியாகப் பிறந்து, அதன் தொழிலை உணர்த்தி, அப் பொருளுக்குப் பெய ராயிற்று. சிறத்தாலும் தொழிலாலும் இப் பெயர்கள் வந்தன என வறிக.

ஆகவே, மருதை-மதுரை, குருதை-குதிரை என்ற நான்கு சொற்களும பொருளில் வேறுபாடுடையன என்பதும், மருத மரங்கள் நிறைந்த துறையை யுடைய வையைப் பகுதியில் இவ் வூர் அமைந் திருந்தமையால், மருதை என்றும், இனிமை யுடைய தமிழ் வாழ்ந் திருந்தமையான், மதுரை என றும், நல்ல நிறத்தை யுடைமையான் குருதை என்றும, குதித் தோடும் தொழி லுடைமையான், குதிரை யென்றும பெயர்கள் அமைந்தன வென் பதும நோக்கத் தக்கன. இவ் வாறே, இன்னும், உண்மைத் தமிழ்ச் சொற்களைச் சீறா ரிடையே காணலாம்.

அரசுமுறை செய்க களவில் லாகுக: அரசன் முறை வேண்டி னூர்க்கும குறை வேண்டினூர்க்கும் ஆவன செய்வா னுக. நாட் டில் களவு தொலைவ தாக என்றூர். அரசன் முறை செய்து காக்கா னுயின், குழப்பம் வளர்ந்து, அராசகம் ஓங்கி, மன்ன னுக்கே இறுதி நேரிடு மாதலால், அதனை வலியுறுத்துவான், 'முறை செய்க' என்றூர். 'முறைசெய்து காப்பாற்று மன்ன வன மக்கட்கு, இறையென்று வைக்கப் படும' என்ற வள்ளுவர் வாய்மொழியும், 'முறை-அறநூலும் நீதி நூலும் சொல்லும் நெறி' என அதற்குக் கூறிய பரிமேலழகர் குறிப்பும் இங்கு நோக்கத் தக்கன.

களவில்லாகுக. தீய செயல் பலவற்றுள்ளும் களவே தலை சிறந்த தாதலின், களவு என எடுத்துக் கூறலான் அறியலாம். பொய், கொலை, களவு, காமம், சூது என ஐம பெரும பாவத்துள் ளும் களவு நடுவ ணமைந்தமையுங் காண்க. 'எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன் றும, கள்ளாமை காக்கதன் நெஞ்சு' எனக் கூறிய வாற்றுன், இதன் கொடுமை புலப்படும். இக காலை நாகரிக வகையில நடக்கும் களவினுக்கு அளவே யில்லை. இவ் வாறு பல வகையில் பலரை வஞ்சித்துப், பொருள் தேடித், திருடிப், பிழைக்கும், பிழைக்க நினைக்கும இவர்களை நோக்கி, வள்ளுவர், வேண்டாம், களவுகாணுதீர், அதனுல் வரும் செல்வம நிலைக்காது என்பார் போன்று, 'களவினு னுகிய ஆக்கம் அளவிறந்து, ஆவன போலக் கெடும்' என்று கூறுகிறூர். இங்ஙனம, விதி முகத்தானும், மறை முகத்தானும கூறிச் செல் லும் முறை இவர்க்கு ஒரு தனிச் சிறப்பாக அமைந்தது. அரசன் முறை செய்து ஆளின், களவு உரு மாய்ந் தொழியு மென்பது கருதியே, முறையும் களவு முன னும பின்னுமாக அமைந்தன.

நன்றுபெரிது சிறக்க தீதில் லாகுக: அறம் சிறந்து விளங்குக. மக்கள் தீமையினின்றும நீங்கி நன்மை பெறுவார்க ளாக. ஒன்றே செயினும் நன்றே செய்க; நன்றே செய்யினும் அன்றே செய்க என்றபடி, செய்வன நல்லன வாகவும், அவையும் காலந் தாழ்த்தாது அப்பொழுதே செய்வன வாகவும் அமைய வேண்டும் என்பதும் குறிப்புப் பொருளாகக் கொள்ள வைத்தார். முன் களவில் லாகுக என்றவர், இதில் தீ தில் லாகுக என்றது களவானே தீமை பலவாக நிகழும திறம் நோக்கி என்க.

மாரி வாய்க்க வளம்நனி சிறக்க: மழை மிக்குப் பல்வகை வளங்களும் சிறப்படைவன வாக என்றார். மாரியையும், அதனால் சிறக்கும் வளத்தையும் இறுதியில் வைத்து, இப்பத்தை மங்கல வாழ்த்தொடு தலைக் கட்டுகின்றார். மழையின் சிறப்புக் கருதியே, ஆசிரியர் பலரும், கடவுள் வாழ்த்தொடும் அதனை அடுத்துப் பல விடங்களிலும் கூறுவா ராயினர். அவை, 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்', 'விசும்பிற் றுளி வீழி னல்லால் மற்றாங்கே, பசும்புற் றலைகாண் பரிது', 'மழையின்றி மாநிலத்தார்க் கில்லை', 'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும் மாரிபெய்து', 'வீழ்க தண்புனல்' எனப் பல் லாற்றானும் மழையைச் சிறப்பித்தமை காண்க. இம் மழை, மிகினும், குறையினும் நோய் செய்யு மாதலால், அதனை இரண்டாகப் பகுத்தனர். இதனை வடவர் அதி விருஷ்டி, அநாவிருஷ்டி என்பர். நீர் இன்றியமையாமையை முன்னிட்டே கடவுள் தண்ணீரை முதலில் படைத்த தாகக் கூறுவர். நம் சமயக் கொள்கையு மிதுவே. பொன் பெரிது சிறக்க என்று தொடக்கத்தில் கூறியவர், இறுதியில், வளம் நனி சிறக்க என்றது, வளம், பொன் முதலான எப் பொருளுக்கும் பொருந்து மாகலான், இதன் தொடர்பு கருதி வழி மொழிந்து முடிக்கின்றார் என்பதுங் காண்க.

இங் ஙனமாகப், பத்து அடிகளில், ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்த பொருள்களைப் பொதிய வைத்த ஆசிரியர், தமிழ்நாட்டு மக்கள் உள்ளத்துள் உறைவா ராயினர். இவ் வடிகளில் உள்ளுவார் உள்ளுவன வாகிய உள்ளுறை முதலிய வற்றையும், இலக்கியச் செறிவு தோன்றவும் உயிர்க்குறுதி பயக்கும் பல செயல் வெளிப்படத் தெளியவும் வைத்துக் கூறிய முறை சிறப்படைவதாக.

இங்கு அளித்த இலக்கிய விருந்தில் சுவை சிறிது குன்றியிருப்பினும், விருந்தினர் குறைபாடு கூறா ரன்றே.

(316-ம் பக்கம் தொடர்ச்சி.)

முற் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும், எதிர் காலத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளையும், தான் இல்லாத இடங்களில் நடக்கின்ற நிகழ்ச்சிகளையும் தெரியும் ஆற்றல் கல்வி யுள்ள மனத்தை யுடையவர்களுக்குத் தான் அமையும். இக் கருத்தினையே,

'கண்ணுடையர் என்பவர் கற்றோர்'

'கற்றோர்க்கு மூன்று விழி' என்று முன்னோர் கூறியிருக்கின்றார். ஒரு ஆசிரியரிடத்துப் பல மாணவர்கள் படிக்கின்றார்கள். படிக்கிறவர்கள் எல்லாரும் ஒரே நிலையில் இருப்ப தில்லை. காரணம், கல்வியாற் பண்படுத்துப் பெற்ற அளவிற்குத் தக்கவாறு தான் கல்வி அளவு பதிந்திருக்கும்.

கலைகளில் சிலர் பல ஆண்டு பயின்று, அரிதாகத் தெரிந்து கொள்ளக் கூடிய பொருள்களை யெல்லாம் மிக எளிதாகத் தெரிந்து கூறுவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். இவ்வித உயரிய ஆற்றல் முன் பிறவிகளில் கற்றுள்ள கல்வி வந்து உதவி செய்கின்றது என்பதையே தெரிவிக்கின்றது. இதனை (உலக மக்கள் இக்கருத்துடனேயே), பொதுவாக, 'விட்ட குறை, தொட்ட 'குறை' என்று கூறுவார்கள்.

'முன்னை யறிவின் றொடர்ச்சியினுண் முகைத்த மலரின் வாசம்போற்
சிந்தை மலர வுடன்மலருஞ் செவ்வி யுணர்வு சிறந்ததால்'

விட்ட—(முற் பிறவிகளில் பலகால் பயின்று) விட்ட
தொட்ட—முற்பிறவிகளில் செய்யத் தொடங்கிய

'குலவுமறையும் பலகலையுங் கொளுத்துவதன்முன் கொண்டமைந்த,
நிலவுமுணர்வின் றிறங் கண்டு'

எனச் சேக்கிழார் பெருமான், சண்டேசுவர புராணத்தில், விளக்கி யிருக்கின்றார்.

'வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்'

என ஔவையார் கல்வி மனப் பழக்கம் என்பதையே விளக்கி யிருக்கிறார். மனப் பண்பிற்குக் கல்வி இன்றி யமையாதது என்பதும், கல்வியால் தான் மனம் விசால மடையும் என்பதும் மனப் பண்பிற்கு ஏற்றவாறு தான் பொருள்களை (எடுத்து) பதித்துக் கொள்ளும் தன்மை யுடையது என்பதும், முற் பிறவிகளிற் கற்ற கல்வி யளவிற்குத் தக இப் பிறவியில் விளக்கமுறும் என்பதும், ஆதலால் கல்வியை கற்க வேண்டியது இன்றியமையாதது என்பதும், முற் பிறவிகளில் படிக்காதவர்களுக்குக் கல்வி வருவது சற்று வருத்தமாகத் தோன்றும், பொருள்கள் மனத்திற் பதிய பல நாட்கள் செல்லும், ஆனால் இதற்கு அஞ்சிக் கற்காது விட்டுவிடல் கூடாது என்பதும்; இப் பிறவியில் மாத்திரம் படிப்பவர்களுக்கு முயற்சியின் அளவு கல்வி பதியும், முயற்சிக்குமேல் பதியாது என்பதும், இப் பகுதியின் முக்கிய குறிப்புக்க ளாகும்.